Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (14.09.2012) பக்கங்கள் 20 ஓசை - 348




உதவிக்கு இப்படியும் வழி 04



தவறும் முடிவும் 05



மோசடி இடம் பெறவில்லை 06



கசந்தது காதல் 08



உச்சப் பயனை பெற்றுக் கொள்ள 14


# தாவும் உறுப்பினர்கள் அச்சத்தில் கூட்டமைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்களில் நால்வர் அரசு பக்கம் தாவத் தயாரான நிலையில் உள்ளதாகவும் இவர்களை அரசு பக்கம் தாவவிடாமல் தடுப்பதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் கூட்டமைப்பு தலைமை ஈடுபட்டுள்ளதாகவும் கிழக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியைச் சாராத நால்வரே இவ்வாறு அரசு பக்கம் தாவ முயற்சி செய்து வருகின்றனர்.

கிழக்கில் எக்கட்சிக்கும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை பலம் கிடைக்காத நிலையில் ஆட்சியை அமைப்பதற்கான முயற்சியில் அரசு கடுமையான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே கூட்டமைப்பில் தெரிவான இலங்கை தமிழரசுக் கட்சியைச் சாராத உறுப்பினர்களை தன்பக்கம் இழுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையிலேயே அரசு பக்கம் தாவுவதற்கு இந்த நால்வரும் பெருமளவில் இணங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் அரசு பக்கம் தாவுவதைத் தடுப்பதற்கான முயற்சியில் கூட்டமைப்பு தலைமை ஈடுபட்டுள்ளதுடன் தமது உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் எனவே அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கில் கூட்டமைப்பின் உறுப்பினர்களை தன்பக்கம் இழுப்பதன்மூலம் முஸ்லிம் காங்கிரஸ் விதிக்கும் கடுமையான நிபந்தனைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியுமெனவும் அரசு எதிர்பார்த்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகள் குழு இன்று இலங்கை வரவுள்ளது. ஆணையாளரின் தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கை வரவுள்ளதுடன், இவர்களின் விஜயத்தின் பின்னர் மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்வார் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்வதில் எந்தத் தடையுமில்லை எனவும் அவர்களின் இந்த வருகையின் மூலம் இலங்கையின் உண்மையான நிலைமைகளை கண்டறிந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் துரித அபிவிருத்தி; பொதுநலவாய குழு மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக்காலை வருகைதந்த பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

கொழும்பிலிருந்து 2 விமானங்களில் பலாலியை வந்தடைந்த பிரதிநிதிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் பலாலி விமான நிலையத்தில் வைத்து வரவேற்று யாழ். நகருக்கு அழைத்து வந்தனர்.



யாழ். வந்த பிரதிநிதிகளுக்கு யாழ். ரில்கோ விடுதியில் வடமாகாண சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான சந்திப்பு ஒன்று ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது.

இதில் பங்கெடுத்துக்கொண்ட பிரதிநிதிகள் வடமாகாண மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துக் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன்; வடமாகாணத்தின் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்தி, மீள்குடியேற்றம், கண்ணிவெடியகற்றல் குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து யாழ். நூல் நிலையத்திற்கு விஜயம் செய்த பிரதிநிதிகள் நூல் நிலையத்தின் முன் வீதியிலிருந்து பாரம்பரிய

19 ஆம் பக்கம் பார்க்க

# ஆட்சியமைப்பதில் இழுபறி கேட்டறிந்தாராம் பிளேக்

(கொழும்பு)

கிழக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி குறித்தும் கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை குறித்தும் றொபேட் ஓ பிளேக் தம்முடன் கலந்துரையாடியதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை மேற்கொண்டுள்ள மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட ஓ பிளேக்கிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்றுக் காலை கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பானது சுமார் 1 மணி நேரம் வரை நடைபெற்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கில் ஆட்சியமைப்பது உறுதி

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்டாயம் ஆட்சியமைக்கும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

யாருடன் இணைந்து ஆட்சியமைக்கப்படும் என்பது அரசியல் சூழ்நிலைகளினால் தீர்மானிக்கப்படும் எனவும் அதிக ஆசனங்களை அரசாங்கமே கைப்பற்றியுள்ளதால் ஆட்சியமைப்பதற்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பதை தீர்மானிக்கவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக வேறு கட்சிகள் கோரும் அனைத்தையும் வழங்குவதில்லை எனவும் எதனையும் வழங்காது எவரும் ஆதரவு வழங்க மாட்டார்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர்

19 ஆம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினைக்கான தீர்வு கூட்டமைப்பால் தாமதம்

(கிளிநொச்சி)

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் தெற்காசிய உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நீர்ப்பாசன அமைச்சில் வைத்து நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இனப்பிரச்சினைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க



# வடக்கில் இன்னமும் மிதிவெடிகள் உண்டா?

## கொமன் வெல்த் பிரதிநிதிகளுக்கு விளக்கம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இருபது வீதமான பகுதிகளிலேயே மிதிவெடியகற்றும் பணி மேற்கொள்ளவேண்டி இருப்பதாக யாழ். செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் முருகதாஸ், கொமன் வெல்த் நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த கொமன் வெல்த் பிரதிநிதிகள் யாழ். நகரில கோ விடுதியில் வடமாகாண சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டனர். இதன்போது யுத்தத்திற்குப் பிந்திய மீள்குடியேற்றத்திற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் மிதிவெடியகற்றும் பணி எவ்வாறு இருக்கிறது என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் வடபகுதியில் 80 வீதமான பகுதிகளில் இவ்வாறு மிதிவெடிகள் அகற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததுடன் யாழ். மாவட்டத்தில் 90 வீதமான பகுதிகளில் அத்தகைய பணி நிறைவெய்தியிருப்பதாகவும் 10 வீதமான பகுதியில் மிதிவெடியகற்றும் பணி விரைவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இதற்கென 893 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும், அரசாங்கமும் வெளிநாடுகளும் இதற்கு நிதி பங்களிப்புச் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,இ)

# கடலில் காணாமல் போனவர் பொதுமக்களால் மீட்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைக் கடலில் தொழிலுக்குச் சென்று காணாமல் போன துரைராஜ் என்பவர் நேற்று முன்தினம் இரவு 1.30 மணியளவில் பொதுமக்களின் முயற்சியினால் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலுக்குச் சென்ற நிலையில் படகில் துளை விழுந்ததால் நீர் உட்புக ஆரம்பித்ததை அடுத்து அவருடன் சென்ற மற்ற மீனவர் பிறிதொரு படகின் உதவியுடன் குறித்த படகை மீட்பதற்காகச் சென்ற போது அப்படகையும் குறித்த நபரையும் காணாது தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் காணாமல் போன படகும் குறித்த நபரும் திக்கம் கடற்பரப்பில் நிற்பதைக் கண்ட மீனவர்கள் அவரை மீட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# பெற்றோர் தினவிழா

(கிளிநொச்சி)

பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் பெற்றோர்தின விழா நாளை நண்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பஸ்வண்டி தீக்கிரை நான்கு பேர் கைது

(வடமராட்சி)

தொண்டைமானாறுப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான பேருந்தை தீயிட்டுக் கொழுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களின் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டபோது ஒருவர் விடுதலை செய்யப்பட்டதுடன் 3 நபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (116)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்றம் நடைபெறும். 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று 9.30 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும்

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலகத்தின் முன்பாக அமைந்துள்ள ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு கே.ஆர்.டேவிட் எழுதிய 'பாடுகள்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும் வெளியீட்டு நிகழ்வின் முதல் பிரதியை வைத்திய கலாநிதி சி.குமரவேள் பெறுகின்றார். வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.ரி.கணேஷலிங்கமும், ஆய்வுரையை முன்னாள தினகரன் ஆசிரியர் சிவா சுப்பிரமணியமும் நிகழ்த்துவர். (105)

# இன்று கொடியேற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த கொடியேற்றத் திருவிழா இன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு அடியார்களின் வசதி கருதி பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சாலை போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொணடுள்ளது.

இதன்படி தும்பளை வீதியூடாக மந்திகை வீதி ஊடாக வல்லிபுரக் கோயிலுக்குச் செல்வதற்கு ஏதுவாகப் பேருந்துகள் சேவையில் ஈடுபடும் எனவும் பருத்தித்துறையிலிருந்து புறப்படும் 750 இலக்கப் பேருந்துகள் ஆலயத்திற்குச் சென்றே யாழ்ப்பாணம் செல்லும் எனவும் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பேருந்துகள ஆலயத்திற்குச் சென்றே பருத்தித்துறைக்குச் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# பிரதிநிதிகள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மீள்குடியேறி எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்பவர்களின் எதிர்காலம், மீள்குடியேறி திரும்பச்சென்றவர்களின் நிலைமை, மீள்குடியேறத் தயாராகவுள்ளவர்களின் வசதி வாய்ப்புக்கள் பற்றியும் விரிவாக ஆராயப்படவிருக்கின்றன.

பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பொதுச் செயலாளர் எம்.எம்.எம்.றமீஸ் வேண்டுகின்றார். (105)


## ஊர்காவற்றுறை பிரதேச சபை
## வேலைக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் விநியோகித்தல் - 14.09.2012 முற்பகல் 10.00 மணி முதல், 20.09.2012 முற்பகல் 10.00 மணிவரை.

கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி - 21.09.2012 முற்பகல் 10.00 மணிவரை.

கேள்வி திறத்தல் - 21.09.2012 முற்பகல் 11.00 மணி

01. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்.
02. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
03. கேள்விப் பத்திரப் பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுமதி சேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்.
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை "தவிசாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடல்வேண்டும்.

    மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்குக் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | வேண்டப்படும் இக்ராட் தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் (VAT, NBT வரிகள் நீங்களாக) |
|---|---|---|---|
| நாரந்தனை வடமேற்கிலுள்ள கீரிக் குளத்தினை ஆழமாக்குதல் | C-10 அல்லது அதற்கு மேல் | 10500.00 | 500.00 |

ம.ஜெயக்காந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை. 14.09.2012

(C/1724)



## மக்கள் வங்கி அறிவித்தல்
### அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

யாழ். பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில், எதிர்வரும் 15.09.2012 அன்று நடைபெற இருந்த அடகுநகை ஏலவிற்பனை பிற்போடப்பட்டுள்ளது. ஏலவிற்பனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13.09.2012

(C/1866)



## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வீதிக்குப் பெயர் சூட்டுதல்

மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்வரும் வீதிகளுக்குப் பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்குப் பொது மக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை / அபிப்பிராயங்களை எதிர்வரும் 28.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

01. 341, கோவில் வீதிக்கு அருகிலுள்ள வீதி (துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகில்) - செல்லப்பா சுவாமிகள் வீதி என்றும்
02. 141/2, கோவில் வீதிக்கு அருகிலுள்ள வீதி (மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு அருகில்) - யோகர் சுவாமிகள் வீதி என்றும் மாற்றப்படுகின்றது.

திருமதி யோ.பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/1865)

# காணாமல் போனோர் குறித்து அடுத்த வாரம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

2006 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை ஒன்றை அடுத்த வாரம் ஐந்து நாட்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கென கொழும்பில் இருந்து வருகை தரும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினர் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இந்த விசாரணைகளில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் கிடைகப்பெற்றிருந்த இந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் ஆராய்ந்து பார்த்திருப்பதாகவும் அதன்போது சமூகமளித்திருந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் முறைப்பாடுகளே இந்தக் காலப்பகுதியில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின யாழ். இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த விசாரணை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீதியாக விசாரணை செய்யப்படவுள்ளது.

இந்த விசாரணைகளின் போது அந்தப் பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி, அந்தப் பிரிவு கிராமசேவகர் ஆகியோர் சமுகமளிக்கக் கோரப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பகுதிகளுக்கும், 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் - 03 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள சாவகச்சேரி, கொடிகாமம், கோப்பாய் பகுதிகளுக்கும் 19 ஆம் திகதி கே.கே.எஸ். - 03 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கும் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் - 02 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டைப் பகுதிகளுக்கும், கே.கே.எஸ் - 01 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் அச்சுவேலி, இளவாலைப் பகுதிகளுக்கும், கே.கே.எஸ். - 02 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் தெல்லிப்பழை பலாலி ஆகிய பகுதிகளுக்கும் உரியவர்களுக்கு விசாரணைகள் நடைபெறவுள்ளன.

21 ஆம் திகதி இந்த விசாரணைகளின் போது விடுபட்டவர்களின் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (பா)

# வவுனியாவில் பாரதியார் தினம்

(வவுனியா)

புரட்சிக்கவி பாரதியாரின் நினைவு தினம் கடந்த 11ஆம் திகதி வவுனியா கலை இலக்கிய மன்றத்தினால் அனுஷ்டிக்கப் பட்டது.

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா - குருமண்காட்டுச்சந்தியில் உள்ள பாரதியார் சிலைக்கருகில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு பாரதியாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்ததுடன், பாரதியார் தொடர்பான உரையினையும் ஆற்றியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ். சந்திரகுமார், வவுனியாவில் உள்ள பெரியார்களின் சிலைகளைப் பராமரிப்பதற்கு பலர் ஆர்வம் கொண்டுள்ளனர்.

எனவே அவற்றை வவுனியா நகரசபை ஆர்வ முள்ளவர்களிடம் கையளித்து அவற்றைப் பராமரிப்பதுடன், பெரியார்களின் நினைவு தினத்தில் அவர்களை நினைவு கூர்வதற்கான ஒழுங்கமைப்பையும் செய்து கொள்வதன் ஊடாக எமது எதிர்கால சந்ததிக்கு எமது கலை, கலாசாரம் தொடர்பில் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும் எனத் தெரிவித்தார். (160)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அடுத்தவாரம் இறுதிப்பரீட்சை

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கற்கை நெறியினை மேற்கொண்டிருக்கும் ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்கள் 10ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை தமது கல்வி வலயங்களினூடாக பரீட்சைக்கான படிப்பு விடுமுறையைப் பெற்றுப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் தொகையான ஆசிரிய மாணவர்கள் இக்கலாசாலையில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதால் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் உள்ளிட்ட கல்விவலயப் பாடசாலைகளில் ஆசிரிய மாணவர்கள் கற்பித்தல் பயிற்சியை மேற் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கலாசாலை அதிபரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்குப்பிறகு நெடுந்தீவு உட்பட்ட தீவகப் பாடசாலைகளில் ஆசிரிய கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (137)

# கணக்கெடுப்பு

(பருத்தித்துறை)

இலங்கை பூராகவும் பாடசாலைகளின் வருடாந்த கணக்கெடுப்பு தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெற்று வருகின்றது.

இது குறித்து படிவங்களை பாடசாலைகள் தத்தமது கோட்டக்கல்விப் பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (109)

# சமாசத்தின் அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூ.ச.சமாசம் 2006ஆம் ஆண்டு தொடக்கம் தமது உறுப்புரிமை சங்க அங்கத்தவர்களின் நலன் கருதி 60 வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அவர்களது விபத்துச் சந்தா பங்களிப்பிற்கேற்ப மாதாந்தம் ஒய்வூதியம் வழங்கி வருகின்றது.

உதாரணமாக 10,000 ரூபா பங்களிப்பு மீதி உள்ள ஒருவருக்கு 12 வீதம் படி 1200 ரூபா ஒரு மாதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 450 அங்கத்தவர்கள் மாதாந்தம் பயன்பெற்று வருகின்றார்கள். சமாசம் ஒரு மாதத்திற்கு குறித்த 450 அங்கத்தவர்களுக்கு ரூபா ஐந்து இலட்சம் ஒய்வூதியமாக வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் அங்கத்தவர்கள் பயனடைவதுடன் அவர் இல்லாத காலத்தில் அவரது பின்னுரித்தாளியான அவரது மனைவிக்கும் இவ் ஒய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருவள்ளுவர் சிலை திறப்பு

(சாகவச்சேரி)

கரணவாய் கருணையம்பதி சனசமூகநிலைய முன்றலில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவும் சிற்பக் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்றது.

நிலையத்தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கரணவாய் கலட்டி பிள்ளையார் ஆலயத்திலிருந்து சிற்பக்கலைஞர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

சாவகச்சேரி - கச்சாய் வீதியைச் சேர்ந்தவரும் முல்லைத்தீவு - சிலாவத்தை தமிழ் வித்தியாலய சித்திரபாட ஆசிரியருமான துரைசிங்கம் குமரநாதன் என்ற சிற்பக்கலைஞரே பாராட்டப்பட்டவராவார். திருவள்ளுவர் சிலையை வடிவமைத்தற்காகவும் அவர்களது கலைச் சேவையை பாராட்டியும் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பல்வேறு நூல்களை வெளியிட்டும் சமூக விழிப்புணர்வு நாடகங்களை தயாரித்தும் நடித்தும் பல கலைச்சேவைகளை புரிந்துள்ளார். இவருக்கு "தேசிய வீரப்பொதுமகன்" என்ற விருது ஜனாதிபதியாலும், சைவப்புலவர் நுண்கலைமாமணி கலை ஞானி, கலைமாமணி என்ற பட்டங்கள் என்பவை இவரது கலைச்சேவைக்காக கிடைத்த பட்டங்களாகும். (11)

# துரித கற்றல் செயலமர்வு

(வவுனியா)

யுனிசெவ் நிறுவனத்தினால் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள துரித கற்றல் செயற்றிட்டத்தினால் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு பொருத்தமான ஆசிரியர்களை அனுப்பி பயிற்சியினைப் பெற்று துரித கற்றல் செயற்றிட்டத்தினை பாடசாலைகளில் அமுல்படுத்துமாறு வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார். (160)

# மனித உரிமை ஆணைக்குழு கிளிநொச்சியில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி பிரதேசசெயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பிற்கான சிவில் அமைப்புக்களுக்குரிய அழைப்பிதழ்கடிதங்கள் தற்சமயம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டு வருவதாக அதன் இணைப்பாளர் ரி.கனகராஜ் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இந்தச்சந்திப்பில் சுமார் 60 சிவில் அமைப்புகள் பங்குபற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இந்தச்சந்திப்பில் ஒவ்வொரு சிவில் அமைப்புங்களில் இருந்தும் ஒருவரே பங்குபற்ற முடியும் என்று ரி.கனகராஜ் தெரிவித்தார்.

முதன்முறையாக இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் சமூகப்பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடைபெறவுள்ளதால், கிளிநொச்சி மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கு பிரஸ்தாபிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கொழும்பில் இருந்து வருகை தரும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளும் பங்குபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# காபெற் வீதிமீது சல்லிக்கற்கள்; காத்திருக்கிறது ஆபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

காபெற் இடப்பட்ட வீதிகளின் மேல் சல்லிக்கற்கள் சிதறிக்கிடப்பதால் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வேகமாகப் பயணிப்போர் விபத்துக்களைச் சந்திக்க கூடிய அபாயநிலை காணப்படுகிறது.

வீதிப்புனரமைப்பு வேலைகள் பூரணமாக முடிவுற்ற பின்பு அவ்வீதியில் இருமருங்கிலும் மிகுதியாகக்கிடந்த சல்லிக்கற்கள் எடுக்கப்பட்டுள்ள போதிலும், கனரக வாகனங்களில் இருந்து எடுத்து வரப்படும் கற்களே இவ்வாறு தவறுதலாக கொட்டப்படுவதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு காபெற் வீதிமீது கொட்டப்பட்டுக் கிடக்கும் கற்களால், பாதசாரிகள் உட்பட துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன தங்கள் பயணத்தின் போது அசௌகரியத்தையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கி வருகின்றன.

கைதடி - நாவற்குழிச்சந்தியிலும், யாழ். கந்தர்மடச்சந்தியிலும் இவ்வாறு சல்லிக்கற்கள் வீதியில் கொட்டப்பட்டுக் கிடப்பது குறிப்பிடத்தக்கது. (138)

பாருடன் பழகினாலும் அந்தஸ்து பார்க்காமல் ஒரே மாதிரியான அனுகுமுறையுடன் உள்ளன்பு குறையாமல் பழகுங்கள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## அவதூறுகளின் நிழலில்...

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே என்று கண்ணதாசன் எழுதினார். அதுபோலத்தான் நமது ஊடகங்களும் என்று எழுதுவதற்கு ஒன்றே ஒன்று தடுக்கிறது. பொய்யிலே பிறந்தாலும் இவர்களில் பலர் வளர்ந்து வருவதென்னவோ அவதூறுகளில்தான் என்பதையே நாளும் பொழுதும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாடகர் உன்னிகிருஷ்ணன் எதையோ சொல்ல, இவர்களோ கிடைத்தது வாய்ப்பு என்று தங்கள் மனவக்கிரங்களையெல்லாம் கொட்டித் தீர்க்கிறார்கள். அரசியல் நாகரிகம், ஊடகத்துறை நாகரிகம் எல்லாம் காற்றில் பறக்கிறது மலத்துணுக்குகளாக!

கேரளாவில் பிறந்து தனது முதலாவது திரைப்பாடலுக்கே இந்திய தேசிய விருது பெற்றவர் உன்னிகிருஷ்ணன். இவர் பிரபல கர்நாடக இசைப்பாடகரும்கூட. தமிழ் அரசியலையோ இலங்கை அரசியலையோ அறிந்திராதவர். அரசியல் நிலைவரங்கள் குறித்து எந்தக் கருத்தையும் ஒருமுறையேனும் வெளிப்படுத்தியிராதவர்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அழைப்பில் யாழ் மாநகர சபை மற்றும் மாகாணசபை ஏற்பாட்டில் நல்லூர்த் திருவிழா கடைசி நாளன்று கச்சேரி செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். இங்குள்ள அரசியலையோ அரசியல்வாதிகளையோ அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் தமிழருமல்ல.

விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த, யாழ்ப்பாண மக்களின் ஒரேயொரு அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா பாடகருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அதை மரியாதையுடனும் மகிழ்வுடனுமே ஏற்றுக்கொண்ட பாடகர், தனது கச்சேரியை முடித்துக்கொண்டு நாடு திரும்பினார்.

அங்கு போய் இறங்கியபிறகே இந்த அநாகரிகத் தீவிரவாதிகள் அவரை முற்றுகையிட்டு மிரட்டத் தொடங்கினர். தமிழ்த் தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு அரண்டுபோன மலையாளக் கலைஞரான உன்னிகிருஷ்ணன், பொய்யர்களின் அவதூறை நம்பி, மக்கள் வெறுக்கும் அமைச்சரிடமிருந்து பொன்னாடை வாங்கிக் கொண்டது தவறுதான், இனி இப்படி நடந்துகொள்ள மாட்டேன் என்று மன்னிப்புக்கேட்க வைக்கப்பட்டார்.

இன்னொரு நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட – அதிலும் அத்தேர்தலில் அனைத்துத் தமிழ் வேட்பாளர்களை விடவும் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற – தலைவரிடமிருந்து பொன்னாடை பெற்றதைத் தவறெனச் சொல்லும் அநாகரிகத்தைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார் உன்னிகிருஷ்ணன். இதிலுள்ள மனிதப்பண்பற்ற காடைத்தன அரசியலைப் புரிந்துகொள்ளுமளவிற்கு நம் தமிழ் ஊடகவிற்பன்னர்களின் நாகரிக உணர்வும் வளர்ந்திருக்கவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அரசியல் எதிரியை என்ன அவதூறையும் சொல்லி, துரோகியெனத் தீர்ப்பெழுதி, கொலையும் செய்துவிட வேண்டுமெனத் துடிக்கும் நாகரிகமே! இவர்கள் மற்றவர்களை இழிவுபடுத்துவதன் மூலமே தங்கள் இழிவுகளை மறைத்துக்கொள்ள முடியும் என நம்புபவர்கள். உணர்ச்சிக் கோஷங்களின் பேரால் மக்களைத் துன்பப்பட விட்டுவிட்டு, உல்லாச வாழ்க்கையைத் தங்களுக்கென வரித்துக் கொண்டிருக்கும் இவர்கள், தங்கள் மக்கள்விரோதப் போக்குகளையும் இழிவுகளையும் மறைத்துக்கொள்ள மக்களை ஏமாற்றும் தமிழுணர்வைக் கவசமாகப் பிடித்துக்கொள்கிறார்கள்.

உன்னிகிருஷ்ணன் சொன்னது ஒன்று, இவர்கள் பத்திரிகையில் எழுதியது வேறொன்று, தங்கள் இணையத்தளத்தில் பதிவிட்டதோ இன்னுமொன்று என்பதைப் பார்க்கும்போதே இவர்களுக்கும் உண்மை, நேர்மை என்பவற்றுக்கும் எந்த சம்பந்தமுமில்லாததையே காட்டிக்கொள்கிறார்கள். அவதூறுகளைப் பிறர்மீது சளைக்காமல் வீசிக்கொண்டிருப்பதன் மூலம் தங்கள் அசிங்கங்களையும் மக்களது வாழ்வில் எந்த அக்கறையுமில்லாத தங்களது மேட்டிமைப் போக்கையும் மறைத்துக் கொள்ளலாம் என நினைக்கிறார்கள். மக்கள் எப்போதுமே ஏமாறிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

- ஆசிரியர்

# வடமாகாணத்தினுள் உட்பிரவேசிக்கும் வாகனச் சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

வட மாகாண நுழைவாயிலினூடாக ஏ - 9 வீதியில் பயணிக்கும் வாகனச் சாரதிகளுக்கான புதிய அறிவித்தலொன்றை வட மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா வெளியிட்டுள்ளார்.

ஏ - 9 பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் சாரதிகளுக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி புதிய அறிவித்தல் தொடர்பான ஆலோசனைப் பத்திரமொன்றையும் ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து சாரதிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

மேற்படி ஆலோசனைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு,

தற்போது தீவின் வடமாகாணத்தின் நுழைவாயிலூடாக நீங்கள் ஏ - 9 வீதிக்குப் பிரவேசித்துள்ளீர்கள். நீங்கள் ஏ - 9 வீதியூடாக வாகனத்தைச் செலுத்துகையில் ஒரு ஒழுக்கமான சாரதியாக பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய கவனமாக நடந்துகொள்ள வேண்டுமெனக் கேட்கப்படுகின்றீர்கள்.

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடு வரையான வீதிகளில் திருத்தவேலைகள் நடைபெறுவதால் தயவுசெய்து உங்கள் வாகனம் செலுத்தும் வேகத்தைக் குறைக்கவும். வேகமாக வாகனத்தைச் செலுத்த வேண்டாம்.

அவசரமான நிலைமைகளில் வாகனத்தைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு அத்துடன் வாகனத்தில் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அதேபோன்று அவர்களின் சொத்துக்களின் பாதுகாப்பு பற்றி கருத்திற்கொண்டும் விவேகமான முறையில் வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

நீங்கள் மதுபானம் உட்கொண்டிருந்தால் அல்லது ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் அது வாகன செலுத்தலை நேரடியாகப் பாதிக்கும். அதனால் அந்நிலைமைகளில் வாகனம் செலுத்துவதைத் தவிர்க்கவும்.

ஏ - 9 வீதியின் இருமருங்கிலும் அடர்ந்த மரங்கள் காணப்படுவதால் இப்பிரதேசங்களில் விலங்குகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும். அதனால், விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்காமல் கவனமாக வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான வீதி, மிக வேகமான ஒரு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளது. அதனால் புனரமைப்புப் பணிகளும் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றன. எனவே, வாகனத்தைச் செலுத்தும் போது வீதியின் நிர்மாணச் செயற்பாடுகள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

வீதி நிர்மாண செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் பாதுகாப்பை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். அத்துடன், அறிவுறுத்தல் பலகைகள் மற்றும் சைகைப் பலகைகள் மீது காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைத் தயவுசெய்து பின்பற்றுதல் வேண்டும்.

விதிகளை மீறுகின்ற மற்றும் சட்டத்துக்கு இணங்க அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்கின்ற சாரதிகள் பொறுமை, கீழ்ப்படிவு மற்றும் பணிவன்பு ஆகிய பண்புகளைப் பிரதிபலிக்கின்ற சாரதிகள் மிகவும் வரவேற்கப்படுகின்றனர் என அவ் ஆலோசனைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொலைபேசிக் காதல் வலைவிரிக்கும் பொலிஸ்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டலொன்றில் பணியாற்றும் யுவதியொருவருக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு விடுத்து, அந்த யுவதியைத தான் காதலிப்பதாகவும் அவரைச் சந்திக்க விரும்புவதாகவும் கூறியதாக குற்றம்சுமத்தப்பட்ட நபர் ஒருவரை கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்நபர் தனது தொலைபேசி இலக்கத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டார் எனத் தெரியவில்லை. எனவும் வெவ்வேறான ஐந்து தொலைபேசி இலக்கங்களிலிருந்து தனக்கு அழைப்புக் கிடைத்ததாகவும் பொலிஸாரிடம் குறித்த யுவதி தெரிவித்துள்ளார். இத்தொலைபேசி இலக்கங்கள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு [illegible]லிடத் தொலைபேசி சேவை வழங்கும் ஐந்து நிறுவனங்களுக்கு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன உத்தரவிட்டுள்ளார்.

# வலுவிழந்தோருக்கு நிதி வெளிநாட்டவர் நடைப்பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவையின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் கருத்திற்கொண்டு தேவையான நிதியினை சேகரித்து வழங்கும் முகமாக இலங்கை வாழ் கனடா பிரஜை ஒருவர் 800 கிலோ மீற்றர் வரை நடைப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ஜோன் கீல்ஸ நிறுவனத்தில் பணியாற்றும் அகஸ்ரின் என்பவரே மாத்தறை தொன்தர முனையிலிருந்து பருத்தித்துறை தேவேந்திர முனைவரையுள்ள முழு நீளமான நடைப்பயணத்தை கடந்த ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதியன்று மாத்தறையிலிருந்து ஆரம்பித்துள்ளார்.

இவரது இப்பணிக்கு அனைவரும் ஆதரவும் ஊக்கமும் அழித்துள்ள நிலையில் இது வரை 600 பவுண் நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நடைப்பயணம் அவரது பிறந்த தினமான ஒக்டோபர் 18 ஆம் திகதி பருத்தித்துறையில் நிறைவு பெறுவது தனது வாழ்க்கையில் முக்கியமானதொரு நிகழ்வு என அவர் மகிழ்ச்சியடைகின்றார். இவரது குறிக்கோளும் நன்முயற்சியும் வெற்றி பெற வேண்டுமெனவும் இதற்கு சகல மக்களும் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குமாறும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

# எது பொருளாதார அபிவிருத்தி? ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி என்னவென்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.நடைமுறையில் உள்ள பொருளாதார படுகொலை முறைமையின் வெளிப்பாடுகள் தற்சமயம் வெளியாகின்றன.

இது தொடர்பாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாங்கள் கருத்து வெளியிட்ட போது எங்களை தேசத் துரோகிகள் என அடையாளப் படுத்தினர். நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் தரங்குறைந்த பொருட்களே உபயோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிக்கின்றார்.

இதுவா பொருளாதார அபிவிருத்தி என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

# சம்பந்தனின் தவறும் ஹக்கீமின் முடிவும்

- த.கடலவன்

கிழக்குமாகாண தேர்தல் முடிவுகள் தமிழ் சமூகத்திற்கு கூட்டமைப்பின் தவறுகளை புடம்போட்டுக் காட்டுவதாக முடிகிறது. கூட்டமைப்பினுடைய கோட்பாடற்ற அரசியல் நகர்வுகளே இதற்குரிய பிரதான காரணம் எனலாம். ஏனெனில் கடுமையான தமிழ் இனவாதிகள் போன்று தம்மை கூட்டமைப்பு வெளிப்படுத்தி வந்தாலும், கூட்டமைப்பு தமிழினத்தின் மீதான பற்றுறுதியுடன் செயற்பட தவறி வந்துள்ளது எனலாம். கடந்த காலங்களில் கூட்டமைப்பினர் தமிழினத்திற்காக தமது உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பவர்கள் போன்று தம்மை வெளிப்படுத்தி வந்தாலும் முள்ளிவாய்க்கால் யுத்த ஓய்விற்குப் பின்னர் கூட்டமைப்பினருடைய உண்மை முகங்களை தமிழ் சமூகத்தினர் நன்றாக விளங்கிக் கொள்ள முற்பட்டுள்ளனர்.



**முஸ்லிம் சமூகத்தை தொடர்ந்து கறிவேப்பிலை போன்று கூட்டமைப்பினர் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது என்பதே முஸ்லிம் சமூகத்தினுடைய எதிர்பார்ப்பாக இருந்துள்ளது. தேர்தல் காலங்களில் மட்டும் தங்களுடன் உறவாட வரும் கூட்டமைப்பினர் தேர்தல் முடிந்தபின்னர் முஸ்லிம் சமூகத்தின் ஆதரவு தேவைப்படாத சூழ்நிலையில் நீ யாரோ? நான் யாரோ? என்ற பாணியிலேயே செயற்பட்டு வந்தனர். இதனால்தான் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் சமூகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.**

கிழக்கு மாகாண தேர்தலைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மாகாண சபைத் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு பொருத்தமில்லாத தேர்தல் எனவும், வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே எமது இலக்கு என்று கூறிவந்த கூட்டமைப்பு, கடந்த காலங்களில் மாகாண சபைத் தேர்தல்களில் களமிறங்கி நின்ற தமிழ்த் தலைமைகளை தேசத் துரோகிகள் என்று பட்டம் சூட்டியதையும் எமது சமூகம் மறந்து விடவில்லை. கிழக்கு மாகாண தேர்தலில் கடந்த காலங்களில் போட்டியிட்ட இரா. துரைரத்தினத்தை சம்பந்தன் தனது வாயால் எத் தனையோ தடவை தேசத்துரோகி என்று அழைத்திருக்கிறார். ஆனால் இன்று அதே துரைரத்தினத்தோடு இணைந்து கூட்டமைப்பு கிழக்கு மாகாணத் தேர்தலிலே போட்டியிட்டு வென்றுள்ள போதிலும், முஸ்லிம் சமூகத்துடனும், முஸ்லிம் அரசியல் தலைமைகளுடனும் சரியான முறையில் பரஸ்பரம் நல்லுறவை வளர்க்கத் தவறியதால், கூட்டமைப்பு இன்று அரசியல் அரங்கில் கிழக்கு மாகாணத்தில் அதுவும் மாகாண சபையில் பொலிவிழந்து விட்டது என்றே சொல்லலாம்.

கூட்டமைப்பினுடைய கொள்கையற்ற போக்குகளை தமிழ் சமூகம் நிராகரிக்கத் தொடங்கியுள்ளது என்பதே கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகளின் முடிவாகும். ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் அனைத்து ஆசனங்களையும் கூட்டமைப்பே கைப்பற்றும் எனவும் கூட்டமைப்பை எவருமே உடைக்க முடியாது எனவும், மேடைகளிலே கர்ச்சித்து வந்த அரியநேத்திரன், மட்டக்களப்பு இராணுவ முகாம் பொறுப்பதிகாரியுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தி தனது பிரசார நடவடிக்கைகளின் போது இடையூறு ஏற்படுத்தக் கூடாது என மன்றாட்டமாகக் கேட்டதாகவும் பின்னர் குறிப்பிட்ட படை அதிகாரிகளுடன் உல்லாசமாக உணவருந்தியதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு படைத் தரப்புடன் நல்லுறவைப் பேணிய அரியநேத்திரன் வாழைச்சேனையிலுள்ள முஸ்லிம் சமூகத்துடனோ அல்லது ஓட்டமாவடியிலுள்ள முஸ்லிம் சமூகத்துடனோ உறவை வளர்க்கத் தவறிவிட்டார். இவ்வாறு சம்பந்தனும் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் மக்களுடனோ அல்லது முஸ்லிம் அரசியல் தலைவர்களுடனோ நல்லுறவைப் பேணவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

முஸ்லிம் சமூகத்தை தொடர்ந்து கறிவேப்பிலை போன்று கூட்டமைப்பினர் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது என்பதே முஸ்லிம் சமூகத்தினுடைய எதிர்பார்ப்பாக இருந்துள்ளது. குறிப்பாக தேர்தல் காலங்களில் மட்டும் தங்களுடன் உறவாட வரும் கூட்டமைப்பினர் தேர்தல் முடிந்தபின்னர் தமது தேவை முடிந்தபின்னர் முஸ்லிம் சமூகத்தின் ஆதரவு தேவைப்படாத சூழ்நிலையில் நீ யாரோ? நான் யாரோ? என்ற பாணியிலேயே செயற்பட்டு வந்தனர். கடந்த காலங்களில் அரசிற்கும் கூட்டமைப்பிற்குமிடையே இடம்பெற்ற அரசியல் பேச்சுவார்த்தைகளின் போது கூட்டமைப்பினர் முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒரு பிரதிநிதியையேனும் இப் பேச்சிற்கு அழைக்க முற்பட்டிருக்கவில்லை. பல தடவைகள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசு கூட்டமைப்பு பேச்சில் தாங்களும் கலந்து கொள்ளவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ள போதிலும் கூட்டமைப்பினர் அக் கோரிக்கையை நிராகரித்தே வந்தனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அமைச்சர் ஹக்கீமிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் சமூகத்தை சமதரப்பாக மதித்து தமிழர் தரப்பு செயற்பட வேண்டுமென உடன்பாடு எட்டப்பட்டபோதிலும் அந்த உடன்பாடு கூட சீராக கடைப்பிடிக்கப்படவில்லை என்பதே முஸ்லிம் தரப்பின் குறையாக இருந்தது. ஆனால் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்கள் தமிழ் சமூகத்துடனும், தமிழ் அரசியல் தலைமைகளுடனும் இணக்க அரசியலை ஏற்படுத்தி அந்த இணக்க அரசியலின் ஊடாக முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் வெல்லவேண்டும் என்றே செயற்பட்டு வந்தனர். முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னர் தமிழ்மக்களுக்கு தாமே தலைவர்கள் என்று கூறிய கூட்டமைப்பினர் முஸ்லிம் சமூகத்துடன் இணக்க அரசியல் என்ற வட்டத்துக்குள் ஒருபோதுமே வரவில்லை எனலாம்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தாம் தொடர்ச்சியாக ஓரம் கட்டப்பட்டு வருவதாகவும், தமக்கு சம அந்தஸ்தை அல்லது உரிய மரியாதைகளை வழங்க கூட்டமைப்பினர் மறுத்து வருவதாகவும் முஸ்லிம் சமூகத்தினரிடையேயும் அதன் தலைவர்களிடையேயும் ஆழமான கருத்துகள் வேரூன்றி உள்ளன. இதனால்தான் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் சமூகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. தமது மக்களினுடைய பிரச்சினைகள் மற்றும் மக்களினுடைய எதிர்காலம் தொடர்பில் சாதகமான முடிவுகளை எட்ட வேண்டுமென்றால், அரசுடன் இணைந்து ஆட்சி அமைப்பதே பொருத்தமானது என்று ஹக்கீம் எண்ணியுள்ளதுடன், அதற்குரிய செயற்திட்டத்துடன் களமிறங்கி உள்ளதைக் காணமுடிகிறது.


அனைத்தையும் இழந்து பரிதவித்துக் கொண்டிருக்கின்ற சம்பந்தன், முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸிற்குத் தருவோம் என்று புலுடா விட்டுப் பார்த்தபோதும் கூட்டமைப்பின் அற்ப ஆசைகளுக்கு மசியாமல் அரசுடன் இணைந்து ஆட்சியமைக்க முஸ்லிம் சமூகம் தற்போது உடன்பட்டுள்ளது. இவ் உடன்பாடானது சம்பந்தனிற்கு முகத்தில் கரி பூசிய ஒரு நிகழ்வாகவே பார்க்கப்பட வேண்டும்.

அரசியல் அரங்கில் சாதுரியமான முடிவுகளை எடுக்கமுடியாமல் திண்டாடிவரும் கூட்டமைப்பினர், தமது வெற்றியின் மூலம் சர்வதேசத்திற்கு செய்தி சொல்லப்போவதாக மேடைகளிலே முழங்கிவந்தனர். இனி எந்த மேடைகளில் எதை இவர்கள் முழங்கப் போகிறார்கள்? என்ன சாட்டுப்போக்கை சொல்லப்போகிறார்கள்? மக்களுக்குச் ‘சுத்துவதற்கு’ புதுமுழக்கம் ஒன்றைக் கண்டுபிடிப்பது அப்புக்காத்து மூளைகளுக்குச் சிரமமல்ல. தமிழ்தேசியம் என்று கூறிவந்த இவர்கள் தற்போது மாகாணத் தேசியம் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். நாளை கிராமியத் தமிழ்த் தேசியமென்று இவர்கள் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏற்கனவே இவர்கள் கொள்கையுடன் இருந்திருந்தால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து சுயேச்சையாக கிழக்கு மாகாணத் தேர்தலில் நின்றிருக்கலாம். இவ்வாறு நின்றிருந்தால் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே எமது கோட்பாடு என்று கூட்டமைப்பினர் கூறி வந்ததை நியாயப்படுத்தியிருக்கலாம். இன்று ஆட்சியமைக்க முடியாமல் நடுத்தெருவில் நிற்கின்ற நிலை வந்துள்ள சூழ்நிலையில் கூட்டமைப்பினர் தேர்தலில் போட்டியிடவில்லை. சுயேச்சைக் குழு ஒன்றுதான் போட்டியிட்டது கூட்டமைப்பு தனது கொள்கையிலேயே உறுதியாக உள்ளது என்று கூறியிருக்கலம். ஆனால் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் அரசியல் சாணக்கியம் சற்றுமே இல்லாமல் அடிக்கடி தடுமாற்றத்துடன் இருந்தவாறு எடுக்கின்ற திடீர் முடிவுகள் எல்லாம் நிதானமற்றவையாகவே இருக்கின்றன.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் விடயத்தில் கூட்டமைப்பினர் நடந்துகொண்ட முறைகள் காரணமாகவே முஸ்லிம் சமூகம் தமிழ்த் தலைமை என்று கூறும் சம்பந்தன் தலைமையிலான அணியுடன் கரம்கோர்க்க மறுத்தமையாகும். இவ் அழைப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்திருந்தால் முஸ்லிம் சமூகம் உடனடியாகவே நேசக்கரம் நீட்டியிருக்கும். சம்பந்தனின் அணுகுமுறைகள் காரணமாகவே ஹக்கீம் சம்பந்தன் கூட்டை நிராகரித்துள்ளார் எனலாம்.

# அரச போக்குவரத்து சேவைக்கு சீனாவிலிருந்து 3000 பேருந்துகள்



(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையை வலுப்படுத்த சீனாவிலிருந்து பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அரச போக்குவரத்து சேவைக்காக 3000 பேருந்துகள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுமார் 3500 பேருந்து 15 வருடங்கள் பழையவை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கை போக்குவரத்து சபையை வலுப்படுத்த புதிய பேருந்துகள் தேவை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையிலிருந்து தங்கம் கடத்தல் ஏழு பேர் சென்னையில் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து 38 இலட்சம் ரூபா மதிப்பிலான தங்கக் கட்டிகளை கடத்தி வந்த ஏழு பேரை சென்னை விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து அதிகளவிலான தங்கக் கட்டிகள், சென்னைக்கு கடத்தி வரப்படுவதாக, சென்னை விமான நிலைய சுங்கத் துறையினருக்குத் தகவல் கிடைத்தது.

இரவு முதல், கொழும்பில் இருந்து, சென்னை வந்த விமானப் பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் கண்காணித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணிக்கு வந்த ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானப் பயணி, அகமது மொய்தீன் (39) மீது அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அவர் தன்னிடம் வரி செலுத்தும் பொருட்கள் ஏதும் இல்லை எனக்கூறி, கிரீன் சேனல் வழியாக வெளியேற முயன்றார். அவரைச் சுற்றிவளைத்த அதிகாரிகள் தனி அறையில் சோதனை நடத்தினர்.

அப்போது அவரது உள்ளாடைக்குள் ஏதோ ஒரு பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. ஆடைகளை களைந்து பார்த்த போது, கறுப்பு நிற கார்பன் காகிதத்தில் சுற்றி, 237 கிராம் தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருந்தார். இதன் சர்வதேச மதிப்பு, எட்டு லட்சம் ரூபா.

அதேபோல காலை 10.30 மணிக்கு, கொழும்பிலிருந்து வந்த மற்றொரு விமானத்தில், இலங்கையைச் சேர்ந்த பொன்னுசாமி, ஜயராத்துரை, கந்தன், தஞ்சையைச் சேர்ந்த சிவகுமார் உட்பட, ஆறு பேர் சென்றனர்.

இவர்களை தனி அறையில் அதிகாரிகள் சோதனை செய்தனர். இதில், அனைவரும் உள்ளாடைக்குள் வைத்து தங்கக் கட்டிகளை கடத்தி வந்தது தெரியவந்தது. ஆறு பேரிடம் இருந்து, 880 கிராம் தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதன் சர்வதேச மதிப்பு, 30 இலட்சம் ரூபா. சுங்கத் துறையினர் அவர்களை கைது செய்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இதில், மண்ணடியில் உள்ள தங்க நகை வியாபாரியிடம் கொடுக்குமாறு கடத்தல் கும்பல், தங்களிடம் கொடுத்து அனுப்பியதாக அவர்கள் தெரிவித்தனர். கடத்தலின் முழுப் பின்னணி குறித்து, அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தங்கம் விலை கடந்த சில வாரங்களாக உச்சத்தில் இருப்பதால், தங்கக் கடத்தலும் விமான நிலையத்தில் அதிகரித்து வருகிறது. 'இலங்கையில் இருந்து தங்கம் கடத்துவது அதிகரித்துள்ளது.

# இலங்கை தொடர்பில் அமெரிக்காவில் பிரேரணை

(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான மற்றுமொரு பிரேரணை ஒன்று இந்த வாரம் அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளுக்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்புகளைக் கோரும் வகையில் இந்தப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் இந்தப் பிரேரணை இந்த வாரம் முன்வைக்கப்படுகின்ற போதிலும், அது உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பது குறித்து உறுதியான தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை இந்தப் பிரேரணையில், இலங்கை அரசாங்கம் யுத்தபாதிப்புக்கு உள்ளாக பிரதேசங்களின் மேற்கொண்ட மீளமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள்குடியேற்றங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இதில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவது. தொடர்பில், அரசாங்கம் இன்னும் அசமந்த நிலையில் இருக்கின்றமை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# திரவநிலை எரிவாயு மின்சாரம்

(கொழும்பு)

திரவநிலை எரிவாயு மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெகு விரைவில் கெரவலபிட்டி, புதிய மின்னுற்பத்தி நிலையத்தை ஆரம்பிக்க உள்ளதாக அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கொழும்பிற்கு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித் தார்.

நீர்த் தேக்கங்களுக்கு தேவையான நீர் இன்னும் நிறைவாக இல்லாத போதும் தற்சமயம் மின்சார விநியோகம் துண்டிக்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக இலங்கை செயற்படாது



(கொழும்பு)

இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான நடவடிக்கைகள் எதற்கும், இலங்கையில் இடம் வழங்கப்பட மாட்டாது என்று, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.


இந்திய நீர் மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டத்தை அவதானிக்கும் நோக்கில், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு சேவை, யாழ்ப்பாணத்தில் அவதானிப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளதாக, இந்தியப் புலனாய்வு சேவையான றோ அமைப்பை கோடிட்டு த பயனியர் (the pioneer) என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக றோ அமைப்பு நேற்று முன்தினம் இந்திய புதுடில்லியில் கலந்துரையாடல்களை நடத்தி, இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு, இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளை கேட்டுக்கொண்டது.

றோ அதிகாரிகளின் அறிக்கையின் படி, பாகிஸ்தானின் ஐ. எஸ்.ஐ.யின் அவதானிப்பு மையம் மூலம், விசாகப்பட்டணத்தில் நங்கூரமிட்டிருக்கும் ரஷ்ய வம்சாவளியான ஐ.என். எஸ். சக்ரா என்ற அணுவாயுத நீர் மூழ்கி கப்பல் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள நீர் மூழ்கி கப்பல்களின் தொலைத் தொடர்புகளை ஒட்டுக் கேட்க முடியும்.

எனவே, இது தொடர்பாக இலங்கைக்கு தெரியப்படுத்தி உண்மையை அறிய வேண்டும் என்றும் றோ அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். இதேபோன்று, சீனாவும் அந்தமான் கடற் பிரதேசத்தில் உள்ள கப்பல்களின் நடமாட்டத்தை அவதானிப்பதற்காக, கொக்கோஸ் தீவுகளில், அவதானிப்பு நிலையத்தை அமைத் திருந்ததையும் றோ அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் மோசடிகள் இடம்பெறவில்லை

(கொழும்பு)



கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் போது மோசடிகள் எதுவும் இடம்பெறவில்லை என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

மோசடிகள் இடம்பெற்றதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டதை அடுத்தே மோசடிகள் இடம்பெறவில்லை என்ற தகவல் கிடைக்கப்பெற்றதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் போது குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்டதாகவும் பரீட்சையின் போதும் மோசடிகள் இடம்பெற்றதாகவும் ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க வினால் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், மோசடிகள் இடம்பெற்றதாக, அவருக்கு தொலைபேசி மூலம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகக்கூறி அவருக்கு கிடைத்த தொலைபேசி இலக்கங்களை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர், ஆசிரியர் சேவைச் சங்க செயலாளருடன் தொடர்புகொண்ட நபர்களிடம் வாக்குமூலங்களையும் பதிவுசெய்துகொண்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, மேற்படி பரீட்சையின் போது எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை என தெரியவந்துள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதியொருவர் நடத்திய தாக்குதலில் சிறைக்காவலர்கள் மூவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைதியொருவர் நடத்திய தாக்குதல் காரணமாக மட்டக்களப்பு சிறைச்சாலை காவலர்கள் மூவர் காயமடைந்திருந்தனர்.

காயமடைந்த சிறைக்காவலர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கந்தசாமி முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

# உணவு பாதுகாப்பு தொடர்பாக வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்த ஏற்பாடு

(கொழும்பு)

நாடு பூராகவும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்குட்பட்டவர்கள் வீதியோர வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார அமைச்சின் போசாக்கு பிரிவு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான வர்த்தகர்கள் தமது உணவு தயாரிப்பு நடவடிக்கைகளின் போது உரிய உணவு ஒழுக்க முறைமைகளை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏராளமான வீதி உணவு விற்பனையாளர்கள் உரிய முறையில் உணவு தயாரிப்பில் ஈடுபடுவதில்லை என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சில உணவு விற்பனை நிலையங்களில் பல நாட்களான கோழி இறைச்சி, ப்ரைட் ரைஸ் என்பன விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக முதலில் உணவு பாதுகாப்பு தொடர்பாக வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டு அது தொடர்பான சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# நீதிபதி இடைநிறுத்தம்

(கொழும்பு)



கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அரவிந்த பெரேராவை நேற்றுமுன்தினம் முதல் சேவையிலிருந்து இடைநிறுத்துவதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்நீதிபதி தொடர்பில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடொன்றை ஆராய்ந்தபின் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவ்வாணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண தெரிவித்தார்.

மேற்படி நீதிபதி தனது பதவிக்குப் பொருந்தாத வகையில், முறைகேடுகள், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக முறைப்பாடு கிடைத்ததாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார்.

# கலைப்பண்பாட்டு ஆர்வத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும்

## துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம்

(வடமராட்சி)

எமது கலைகலாசாரங்கள் தனித்துவம் வாய்ந்தவை. இக் கலை கலாசாரங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். பிள்ளைகளிடம் கலை ஆர்வங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதோடு பருத்தித்துறை ஞானசம்பந்தன் கலாமன்றத்தின் 50 ஆண்டுப் பணிபாராட்டுக்குரியது என யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் பொன் விழாவிலும் மலர் வெளியீட்டிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தர்.

இன்று கலாசார சீரழிவுகள் இடம்பெற்று வருவதாகக் கூறிக் கொண்டிருக்கிறோம். அக்கலாசார சீரழிவுகளுக்கு நாமே காரணம் என்பதை நாம் உணரத் தவறி விடுகிறோம். எமது கலை கலாசாரங்கள் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டு எதிர்காலச் சந்ததியினர் சிறப்பாக வழி நடத்தப்பட்டால் கலாசார சீரழிவுகள் இடம்பெற முடியாது.

சிறப்பம்சங்கள் நிறைந்த எமது கலை, கலாசாரங்கள் எவராலும் அழிக்கமுடியாதவை. இன்று நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இவற்றினை நாம் எமக்குத் தேவையான அளவிலேயே பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பிள்ளைகளிடம் கலையார்வம் ஏற்படுத்தப்படவேண்டும். ஞானசம்பந்தர் கலைமன்றம் போன்ற பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் மன்றங்கள், நிலையங்களுக்கு பிள்ளைகள் அனுப்பப்படவேண்டும். கலை, கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வுகள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் இன்றைய பிள்ளைகளான எதிர்காலச் சந்ததியினர் கலாசாரத்தைப் பேணக்கூடிய சிறந்த பிரஜைகளாக உருவாகுவர். இது பெற்றோர்களின் முக்கிய பொறுப்பாகும் என்றார்.

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி சபா. இரவீந்திரன் பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா. சுபலிங்கம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (01)

# வன்னேரிக்குளத்தில் உவராகும் பயிர்ச்செய்கை நிலங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் கிராமத்தில் உள்ள பயிர்ச் செய்கை நிலங்கள் உவராக மாறிவருவதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

குஞ்சுக்குளம் கிராமத்தில் ஏற்கனவே 400 ஏக்கர் வரையான பயிர்ச் செய்கை நிலங்கள் உவரடைந்துள்ளதாகவும், கடல்நீர் உட்புகுவதாலும் மழைநீர் தேங்கி நிற்பதாலுமே இந்த உவர்த்தன்மைக்கு காரணம் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் தற்போது ஐயனார் 10 ஆம் ஒழுங்கை, அம்மன் கோயில் பகுதி மற்றும் வன்னேரி மையப்பகுதி ஆகியன படிப்படியாக உவரடைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)



ஈவினை கிழக்கு நாகதம்பிரான் வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் அக்கிராம மக்களின் பங்களிப்புடன் சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இதனை வலி.தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் இ.அரிகரன், ஈ.பி.டி.பி. வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் இராஜசேகரம், ஈ.பி.டி.பி. வலி.வடக்கு அமைப்பாளர் அன்பு மற்றும் கலையரசி சனசமூக நிலையத்தலைவர் சி.இராசேந்திரம் ஆகியோர் பணிகளைப் பார்வையிடுவதைக் காணலாம். (165)

# ஆடு கடத்தல்

வடக்கு வரணிப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் பருத்தித்துறை - கொடிகாமம் பிரதான வீதியால் ஆட்டோ வாகனத்தில் வந்த குழுவினர் மேச்சலுக்காக விடப்பட்டிருந்த மறி ஆடு ஒன்றை கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீதியில் ஆட்டோ நின்றைதை சிலர் கண்டுள்ளனர். திடீரென ஆடு பலத்த சத்தமிட்டுள்ளது. அப்போது அவர்கள் அதனை ஆட்டோவில் தூக்கி ஏற்றிக் கொண்டு ஓடியுள்ளனர். உடனடியாக அப்பகுதிக்குச் சென்ற இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஆட்டோவை பின் தொடர்ந்தும் அவர்களைப் பிடிக்கமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.(150)

# பாதுகாப்பு பெட்டகங்கள் இல்லை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளில் 'லொக்கர்' என அழைக்கப்படும் பாதுகாப்புப் பெட்டகங்கள் இல்லாதது பெரும் குறையாக உள்ளதாகப் பல பொதுமக்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் வங்கிகள் யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள போதும், பொதுமக்கள் தமது தங்க நகைகள் மற்றும் முக்கிய ஆவணங்களைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கு ஏற்ற வகையில் இவ் வங்கிகள் எதுவும் 'லொக்கர்'களை ஏற்படுத்தாமையையிட்டு பல்ராலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த காலத்தில் வங்கிகளின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் யுத்தம் முடிந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிப் பல வங்கிகள் தமது சேவைகளை விஸ்தரித்துள்ள நிலையிலும் பாதுகாப்புப் பெட்டக வசதிகள் யாழ்பபாணத்தில் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

தங்க நகைகளுக்காகவும், பணத்துக்காகவும் யாழ்ப்பாணத்தில் பல கொலைகள், கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. தற்போதைய சூழ்நிலையில் வீட்டில் நகைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது இயலாத காரியமாகவுள்ளது எனப் பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் பாதுகாப்புக் கருதிக் குறைந்தளவு பணத்துக்கு நகைகளைக் கொண்டு சென்று வங்கிகளில் அடகு வைத்துள்ளார்கள். பணத் தேவைகளுக்காக இல்லாமல் பாதுகாப்புக்காக மட்டுமே இந்நகைகள் அடகு வைக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொண்ட வங்கிகள், குறிப்பிட்ட தொகைப் பணத்துக்குக் குறைவாக நகைகள் அடகு பிடிக்கப்படமாட்டா என அறிவித்ததைத் தொடர்ந்து வங்கிகளிலும் அவை வைக்கப்பட முடியாத அவல நிலை ஏற்பட்டது.

தென்னிலங்கைப் பகுதிகளிலும், கொழும்பிலும் வங்கிகளின் பாதுகாப்புப் பெட்டக வசதிகள் தொடரும்போது, சகஜநிலையில் சகல செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தில் இவை ஏன் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை எனப் பொது மக்கள் பலரினால் கேட்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வசதி மற்றும் பாதுகாப்பை முன்னிட்டு பாதுகாப்புப் பெட்டக வசதிகள் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் வங்கிகள் தமது வளங்களைப் பெருக்கிக் கொள்வதுடன் பொதுமக்களுக்கான சேவைகளையும் மேற்கொண்டதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# தொலைபேசி இணைப்பு தென்மராட்சியில் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் பல பகுதிகளுக்கு அடுத்த மாதம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக ரெலிக்கொம் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

நுணாவில் - பருத்தித்துறை வதி, பெருங்குளம் வீதி, கைதடி நுணாவில் வீதி, கனகம்புளியடி வீதி என பல வீதிகளில் தொலைபேசிக்கம்பங்கள் நடப்பட்டு பிரதான தொலைத் தொடர்பு வயர்கள் இடப்பட்டு பல மாதங்களா கின்றன. இதுவரை அவ்வீதி களுக்கான இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

இப்பகுதி மக்களின் விண்ணப்பங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே ரெலிக்கொம் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆயினும் அதற்கான பதிலோ, அனுமதியோ இன்னும் கிடைக்கவில்லை. இணைப்புக்கான பொருட்கள், உபகரணங்கள் இன்னும் வரவில்லை என்றும் கூறப்பட்டது.

தற்போது அதன் பணிகள் ஆரம்பமாகியும் இணைப்புக்கள் வழங்க ஏன் காலதாமதம் ஏற்படுகின்றது என அதிகாரி ஒருவரை வினாவியபோதே இதற்கான பரிவர்த்தன பெட்டி இம்மாதம் பொருத்தப்பட்டதும் அடுத்தமாதம் இணைப்புக்கள் வழங்கப்படுவதாகவும் அந்த அதிகாரி உறுதியளித்தார்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுடன் தாம் தொடர்பு கொண்டு முன்னுரிமை என்ற அடிப்படையில் அடுத்தமாதம் இணைப்புகளை வழங்குவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ)

# முரசின் இன்றைய பலன்

(14.09.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 29 ஆம் திகதி.
நட்சத்திரம் மகம் மரணயோகம் பின்னிரவு 4.31 வரை.
திதி திரயோதசி முற்பகல் 10.24 வரை. பின் சதுர்த்தசி.
இராகுகாலம் 10.33 - 12.03 வரை. சுபநேரம் 6.03 - 7.33 வரை
எமகண்டம் 3.03 - 4.33 வரை, குளிகன் காலம் 7.33 - 9.03 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முயற்சித்த காரியம் இனிதே நிறைவேறும். உறவினர், நண்பர் பாராட்டுவர். தொழில் வளர்ச்சியில் அனுகூலம். தாராள பணவரவு. உடல்நலம் சிறக்கும். |
| ரிஷபம் | நண்பரால் நன்மை. மனதில் உற்சாகம், நம்பிக்கை வளரும். தொழிலில் இலாபம். உபரி பணவருமானம். தேடிய பொருள் கைவந்து சேரும். குடும்ப மகிழ்வு. |
| மிதுனம் | நண்பரிடம் கேலி வேண்டாம். அதிருப்தி வரலாம். நிதானம் வேண்டும். தொழிலில் தாமதம் நேரும். பணச்செலவு. கடன் பெறுவீர்கள். பொறுமையால் வெல்வீர். |
| கடகம் | மனம் சஞ்சலத்திற்கு உள்ளாகலாம். அதிக உழைப்பு, கண்காணிப்பு தொழிலில் அவசியம். பணவரவு சுமார். பொருட்கள் கவனம். போட்டி இருக்கும். |
| சிம்மம் | நண்பரின் வாழ்வுக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. கணவன், மனைவி அன்பு கூடும். உறவுகளிடம் மதிப்பு உயரும். |
| கன்னி | பிறருக்கு ஆதரவு தருவீர்கள். தொழிலில் அனுகூலம். தாராள பணவரவில் சுபகாரிய செலவு. உறவினர் வருகை குடும்ப மகிழ்ச்சி. கௌரவம் கிடைக்கும். |
| துலாம் | தடங்கலும், தாமதமும். அனுபவசாலிகளின் உதவி கிடைக்கும். சிக்கனம் நல்லது. போக்குவரத்தில் கவனம். புது முயற்சிகள் வேண்டாம். ஓய்வு நல்லது. |
| விருச்சிகம் | நினைத்த காரியம் முடியும். நண்பர் நல்வழிகாட்டுவர். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி. வருமானம். புத்திரரால் மகிழ்ச்சி.. கடன் தொந்தரவு தீரும். |
| தனுசு | உதவி புரிந்து நற்பெயர் பெறுவீர்கள். தொழிலில் குளறுபடி வரும். முயற்சியால்இலக்கு நிறைவேறும். பணவரவில் தாமதநிலை இருக்கும். ஓய்வு உடல்நலம் காக்கும். |
| மகரம் | பொது நலப்பணிகளில் ஆர்வம். தொழிலில் இடர் விலகும். பணவரவும், நன்மையும் கூடும். வழக்கு வெற்றி. நட்பினால் உயர்வு. சோதனையில் தேர்ச்சி. |
| கும்பம் | புகழ் கிடைக்கும். கூடுதல் உழைப்பு. எதிர்பார்த்த பணம் வராது: பயணத்திற்கு வாய்ப்பு. உடல்நலம் சீராகும். முயற்சிகள் வெற்றிதேடித் தரும். |
| மீனம் | நற்செயல் ஈடுபாடு. பெரியவர்களிடம் ஆலோசனை நல்லது. தொழிலில் புதிய உத்தி. எதிர்பார்த்த பணவரவு. செலவும் ஏற்படும். வழிபாட்டில் ஈடுபாடு. |



## சச்சின் ஓய்வுபெற சரியான காலம்

(கராச்சி)

புகழின் உச்சியில் இருக்கும்போதே டெண்டுல்கர் ஓய்வு பெறவேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் கப்டன் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கர் மிகச்சிறந்த வீரர் தான். ஆனால் அவரது இடத்தில் நான் இருந்திருந்தால், புகழின் உச்சியில் இருக்கும் போதே ஓய்வு பெற முடிவு செய்திருப்பேன். அவரை போன்ற சிறந்த வீரர், அணித்தேர்வு குழுவின் கருணையை எதிர்பார்த்து இருக்க கூடாது.

மகத்தான வீரரான டெண்டுல்கருடன் மக்கள் உணர்வுபூர்வமாக இணைந்துள்ளனர். கடந்த 23 ஆண்டுகளாக அவரது ஆட்டத்தைப் பார்த்து இரசித்து வரும் இந்திய மக்களின் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. டெண்டுல்கர் இல்லாத கிரிக்கெட்டை அவர்களால் கற்பனை செய்ய கூட முடியாது. ஆனால் டெண்டுல்கரின் இடத்தில் இருந்து பார்க்கும் போது, கிரிக்கெட் வாழ்க்கையில் அப்படி ஒரு பெருமையை அவர் பெற்றிருக்கிறார் என்பது தெரியும். அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையை பற்றி முடிவு செய்வதற்கு கண்டிப்பாக ஒரு நேரம் வரும். அது இப்போது வந்திருக்கிறது. கிரிக்கெட்டை விட்டு விலகுவதற்கு இதுவே அவருக்கு சரியான தருணம். ஆட்டத்தில் குறைபாடுகள் வந்த நிலையில் விலகக்கூடிய சூழ்நிலை ஏற்படும் போது, ஒரு வீரரின் முந்தைய சாதனைகளை மக்கள் மறந்து விட்டு, அந்த வீரரின் கடைசி நேர மோசமான ஆட்டங்களை மட்டும்தான் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். அந்த மாதிரி சூழல் வந்து விடக்கூடாது என்பதற்காக தான் நான் புகழின் உச்சியில் இருக்கும் போதே விலகி விட்டேன். தேர்வு குழுவினரின் கருணையை நான் விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

## தடை தாண்டியதில் மகிழ்ச்சி

(நியூயோர்க்)

பலமுறை இறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததால் கிண்ணம் வெல்வேனோ என்ற ஏக்கம் எனக்கு இருந்தது. அந்த வகையில் கிண்ணம் வென்றது மகிழ்ச்சி என அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் கிண்ணம் வென்ற ஆன்டி முர்ரே தெரிவித்தார்.

இப்போது எனது உணர்வு எப்படி இருக்கிறது என்று நீங்கள் கேட்டால், நிம்மதி என்ற வார்த்தையை சொல்வது தான் சரியாக இருக்கும். எனது வெற்றி, இங்கிலாந்து வீரர்கள் வெற்றி பெறமாட்டார்கள் என்ற விமர்சனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

பல முறை இறுதிப்போட்டியில் தோற்று இருப்பதால் என்மீது சற்று நம்பிக்கை இல்லாமல் இருந்தேன். கடைசி தடையை தாண்டி வெற்றி கண்டது மிக மிக மகிழ்ச்சி அளிக்கிறது. வாகை சூடியதும், உணர்ச்சி பெருக்கால் மைதானத்தில் லேசாக அழுது விட்டேன். இதற்கு முன்பு இங்கிலாந்துக்காக கடைசி கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற பிரெட் பெர்ரியை (1995இல் இறந்தார்) நான் நேரில் சந்தித்ததில்லை. ஆனால் எனது காலத்தில் இன்னொரு இங்கிலாந்து வீரர் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்வதை பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனது அடுத்த இலக்கு நம்பர் ஒன் இடத்தை பிடிப்பது தான். அதற்கான முயற்சியில் இறங்குவேன் தெரிவித்தார்.





## ருவென்ரி–20 தொடர் சமன்

(பர்மிங்காம்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ருவென்ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்களுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ருவென்ரி-20 தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. முதலிரண்டு போட்டியின் முடிவில் தென்னாபிரிக்கா 1-0 என முன்னிலை வகித்தது. மூன்றாவது போட்டி பர்மிங்காமில் நடந்தது. மழை காரணமாக இப்போட்டி 11 ஓவர்களாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணிக்கு கீஸ்வெட்டர் 50, ஜோஸ் பட்லர் 32 ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 11 ஓவர் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.

பின் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 11 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் ஹசிம் அம்லா 36, மோர்கல் 17 ஓட்டங்களைப் பெ[illegible]றனர். இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்[illegible] தொடர் 1-1 என சமநிலையானது.

இதேவேளை, இத்தொடர் குறித்து கருத்து வெளியிட்ட டி வில்லியர்ஸ்: உலகக் கிண்ண ருவென்ரி -20 கிரிக்கெட் தொடருக்கான சிறப்பான பயிற்சி இங்கிலாந்துடான தொடர் அமைந்திருந்தது எனத் தெரிவித்தார்.

ICC WORLD TWENTY20

## இணையத்தளம் அறிமுகம்

(டுபாய்)

இலங்கையில் நடைபெற உள்ள உலக கோப்பை ருவென்ரி-20 போட்டித் தொடருக்காக (செப்.18, அக்.7) பிரத்தியேக இணைத்யதளத்தை, சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிமுகம் செய்தது. www.icccricket.com என்ற இணையத்தள முகவரியில் இருந்து சிறப்பு இணையத்தளத்துக்கான இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் அட்டவணை, அணிகள், புகைப்படங்கள், வீடியோ, முடிவுகள், புள்ளி பட்டியல் என அனைத்து விவரங்களும் தொகுத்து அளிக்கப்படுகிறது. இது தவிர சமூக வலைத்தளங்களான பேஸ்புக் மற்றும் டுவிட்டரிலும் பிரத்தியேக பக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



## கிண்ணம் வெல்வோம்


(கொழும்பு)

மேற்கிந்தியத்தீவு அணி ருவென்ரி-20 உலக கிண்ணத்தை வெல்லும் என்று அந்த அணியின் அதிரடி சகலதுறை வீரர் கிறிஸ்கெய்ல் தெரிவித்தார். நான்காவது உலக கிண்ண ருவென்ரி-20 தொடர் இலங்கையில் செப்டம்பர் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது குறித்து கிறிஸ் கெய்ல் குறிப்பிட்டதாவது:

ருவென்ரி-20 உலக கிண்ணத்தை வெல்ல எங்கள் அணிக்கு அதிக வாய்ப்பு உள்ளதாகப் பலரும் கூறுகின்றனர். அதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அதை ஒரு சவாலாக எடுத்[illegible] கொண்டு கடுமையாகப் போராடத் தயாராக உள்ளோம். எல்[illegible] அணிகளுமே பலமானவை என்பதோடு, கோப்பை வெல்ல சம வாய்ப்பு உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

எந்த ஒரு அணியையும் அலட்சியமாக நினைக்க முடியாது. ஒவ்வொரு ஆட்டத்திலும் முழுத் திறமையை வெளிப்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்துள்ளோம். ஒருங்கிணைந்து ஆடி தேசத்திற்கு பெருமை சேர்க்க முயற்சிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.



## முறிந்தது காதல்

ஷரபோவா, சஷா ஆகியோரின் காதல் உறவு முடிவுக்கு வந்துவிட்டதாக ஷரபோவா தெரிவித்தார். ரஷ்யாவின் நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவா சுலோவேனியாவின் முன்னாள் கூடைப் பந்து வீரர் சஷா உஜாசிக், (வயது- 28) என்பரைக் காதலித்து வந்தார். இவர்களது திருமணம்கூட நிச்சயிர்க்கப்பட்டது.இதற்கான வைர மோதிரத்தை ஷரபோவா அணிந்திருந்தார். விரைவில் திருமண திகதி உறுதி செய்யப்பட இருந்தது. இந்நிலையில், திடீரென இவர்களின் உறவு முறிந்து விட்டதாக ஷரபோவா தெரிவித்துள்ளார். இது குறித்து ஷரபோவா கூறுகையில், நாங்கள் பல ஆண்டுகள் ஒன்றாகத் சேர்ந்திருந்தோம்.தற்போது எங்களுக்குள் இருந்த உறவு முடிவுக்கு வந்துவிட்டது. இது இருவருக்கும் வருத்தம் தரக்கூடிய ஒன்று. நாங்கள் சேர்ந்திருந்த காலம் இருவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய காலம். இனி அவரை என் நண்பர் என்று அழைக்கவே விரும்புகிறேன். இருவரும் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்பதால் பார்த்துக்கொள்வதே அரிதாகி விட்டது. இதனால், பிரிய நேரிட்டது. அவர் துருக்கியில் செட்டிலாகி விட்டார். இது மிகவும் கடினமான ஒன்றாக உள்ளது என்றார்.

## ருவென்ரி–20இற்கான சீருடை அறிமுகம்



(கொழும்பு)

உலகக் கிண்ண ருவென்ரி -20 போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணிக்கான புதிய சீருடை நேற்று முன்தினம் கொழும்பில் அறிமுகப்படுத்தப்பட்டது.

உலக கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இலங்கையில் இம் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாஸ் நிறுவனம் இலங்கை அணிக்கான புதிய சீருடையை வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வந்தடைந்தது அணிகள்

(கொழும்பு)

உலகக் கிண்ண ருவென்ரி -20 போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள அணிகள் அனைத்தும் இலங்கையை வந்தடைந்துள்ளன. இந்தியா, நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் போன்ற அணிகள் நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தது. இதேவேளை, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா அணிகளைத் தவிர மற்றைய அணிகள் அனைத்தும் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டுச் செய்திகள்

# வேலணையின் முதல்வன் ஐயனார்





முதலிடம் பிடித்த துறையூர் ஐயனார் அணிக்கு கிண்ணம் வழங்கப்படுவதையும், தெரிவு செய்யப்பட்ட வீரர்களையும் காணலாம்.

(வேலணை)

வேலணைப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் துறையூர் ஐயனார் அணி முதலிடம் பிடித்தது. விளையாட்டத்துறை அமைச்சினதும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினதும் வடமாகாண விளையாட்டுத்துறையினதும் ஏற்பாட்டில் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்ட போட்டிகள் வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த 8ஆம் திகதி வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 09.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வேலணை துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா அணி மோதியது. இதில் வேலணை துறையூர் ஐயனார் அணி 4 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் அல்லைப் பிட்டி சென்.பிலிப்ஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதியது. இதில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி 3 : 0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

இறுதி ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் அணி மோதியது. இதில் வேலணை துறையூர் ஐயனார் அணி 2 : 1 என்ற ரீதியில் வெற்றி பெற்று வெற்றி கேடயத்தினை தனதாக்கி கொண்டது..

இப் போட்டிக்கு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன், வேலணை பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தர்களான சோ.பத்மரூபன், எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இப்போட்டியில் வீரர்களைத் தெரிவு செய்யும் முகமாக யாழ். மாவட்ட கால்பந்தாட்ட பயிற்றுனர் பா.முகுந்தன், வேலணை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.யசிதரன், வேலணை பிரதேச பதில் விளையாட்டு உத்தியோகத்தர் க.மயூரன், ஊர்காவற்துறை பிரதேச விளையாட்டு உத்தி யோகத்தர் எஸ்.சதீஸ்கண்ணா, வேலணைப் பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தர் தி.கோகுலரூபன், வேலனை பிரதேச காலபந்தாட்ட வீரர்களான மு.சிவநேசன் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களை தெரிவு செய்தார்கள். (93)

# மானிப்பாயில் இன்று மென்பந்து கிரிக்கெட்

(மானிப்பாய்)

90ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் தென் கொத்தணி, கரவெட்டி, தெல்லிப்பளை, அரியாலை, ஊர்காவற்றுறை, வடகொத் தணி, பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, காரைநகர், கோண்டாவில், வலி. கொத்தணி, அச்சுவேலி சமாசம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்தி நிலைய சங்க அணிகள் பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (54)

# தேசிய மட்ட கரம் போட்டி நாளை கொழும்பில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண், பெண்களுக்கான கரம் போட்டிகள் நாளை முதல் 16,17ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் வட மாகாணத்தைச் சோந்த 15,19 வயதுப் பிரிவு அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பன 15 வயதுப் பிரிவிலும் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பன 19 வயதுப் பிரிவு சார்பாகவும் கலந்து கொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில், வவுனியா அல் இக்பால் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி என்பன 15 வயது பிரிவி ல் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பன 19 வயதுப் பிரிவில் சார்பிலும் கலந்துகொள்ளவுள்ளன.

இதேவேளை, அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக் அரேபிக் ஜிம் னாஸ்டிக் போட்டிகள் நாளை முதல் கொழும்பு சுகததாச உள்ளக விளை யாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டிகளில் வடமாகாணப் பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கனிஷ்ரன் அதிரடிச் சதம் யாழ். மத்திய கல்லூரி இலகு வெற்றி



யூலியஸ் கனிஷ்ரனின் சிறப்பான சதத்துடன் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வரு கின்றது.

அந்த வகையில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக் கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த 2ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி, யூலியஸ் கனிஷ்ரனின் சிறப்பான ஆட்டத் தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதி யில் யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூலியஸ் கனிஷ்டன் நான்கு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 106 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சௌமிதரன் 40, சஞ்சஜன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந் 31 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 234 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 38.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மயூரன் 52, ரசிகரன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிருபன், மதுஷன் தலா நான்கு, நிரோஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

# நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி –20 யாழ். சென்றல், மானிப்பாய் பரிஸ் வெற்றி





(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டங்களில் மானிப்பாய் பரிஸ் மற்றும் யாழ். சென்றல் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றது.

இதில் முதலாவது போட்டியில் அரயாலை சென்றல் அணிக்கும், மானிப்பாய் பரிஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அரியாலை சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயந்தன் 21, ஜெயரூபன் 17, கிருபாகரன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினோத் நான்கு, டிசான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் அணி 17.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந் தது. இதில் துசெந்திரன் 48, வினோத் 31 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர். சகலதுறையிலும் ஜொலித்த வினோத் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் யாழ். சென்றல் அணியும், திருநெல்வேலி வை.எம். எச்.ஏ. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தேசிகன் 39, ராசேந்திரம் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரேகன் மூன்று, விமலகாந் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 123 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விமலகாந் 28, கலிஸ்ரன் 27, யசிந்தன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிவேந்திரன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். சென்றல் அணி யின் விமலகாந் தெரிவானார். (எஸ்.பி., 93)

# ஈழத்தமிழர் என்பது இலங்கையிலுள்ள தமிழ் பேசுவோர் அனைவருமல்ல!

**- கலாநிதி எம். ஏ. நு‎ஃமான் அவர்களின் காலச்சுவடு பேட்டியிலிருந்து.**

இன்று தமிழ்நாட்டிலும் தீவிரத் தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட இலங்கைத் தமிழர் மத்தியிலும் ஈழம் என்பது தமிழர் தாயகம் எனக் கருதப்படும் வடக்கு - கிழக்குப் பகுதியையே குறிக்கின்றது. தீவிர அரசியல் அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பண்டைக் காலத்திலிருந்து ஈழம், இலங்கை ஆகிய இரு சொற்களும் ஒரு பொருட்சொற்களாகவே வழங்கி வந்துள்ளன. அவ்வகையில் முழு இலங்கையையும் குறிக்கும் சொல்லாகவே ஈழம் என்பது உள்ளது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கு அதிகமானோர் வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்கிறார்கள் என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும். அத்தோடு ஈழத் தமிழர் என்பது இலங்கையில் வாழும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரையும் உள்ளடக்காது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

அடையாள அரசியல் ஓர் எதிர்வினைக் கருத்துநிலைதான். ஏதாவது ஒன்றுக்கு எதிராகத்தான் அது கட்டமைக்கப்படுகிறது. தன்னைப் பிறவற்றிடமிருந்து அது வேறுபடுத்துகிறது. பிற அடையாளங்களைவிடத் தன்னை மேன்மையாகக் கருதிக்கொள்கிறது. அவ்வகையில் ஒவ்வொரு அடையாளமும் பிற அடையாளங்களுக்கு எதிரானதுதான்.

பௌத்த - சிங்கள அடையாளம் பிற அடையாளங்களை வெளி ஒதுக்குவது. சைவத் தமிழ் அடையாளமும் அப்படியே. சைவத் தமிழ் அடையாளம், பௌத்த அடையாளம் ஆகியவற்றுக்கு எதிர்வினையாகத்தான் இஸ்லாமிய அடையாளம் இலங்கையில் உருவாயிற்று...

இலங்கையில் தமிழ் பேசும் இஸ்லாமியர் மத அடையாளத்தை முதன்மைப்படுத்தித் தாங்கள் தமிழர் அல்ல தனியான இனக் குழுவினர் என்பதை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே உறுதிப்படுத்திக் கொண்டனர். சில அரசியல் காரணங்களுக் காகத் தவிர இலங்கைத் தமிழர்களும் இங்குள்ள முஸ்லிம்களைத் தமிழர் என்று கருதுவதில்லை. பிரித்தானியர் காலத்திலிருந்து அரச ஆவணங்களிலும் முஸ்லிம்கள் தனி இனக் குழுவினராகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர். சிங்கள - பௌத்த அடையாளத்துக்கு எதிர்வினையாகவும் முஸ்லிம் அடையாளம் இலங்கையில் வலுப்பெற்றது. தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதிகள் வர்த்தகப் போட்டி காரணமாக 19ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிராகத் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டனர். இதன் விளைவாக நவீன இலங்கையின் முதலாவது மிகப் பெரிய இனக் கலவரம் - சிங்கள x முஸ்லிம் கலவரம் - 1915இல் வெடித்தது. இதில் முஸ்லிம்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். பிரித்தானிய அரசு இராணுவச் சட்டத்தைப் பயன்படுத்தி அக்கலவரத்தை அடக்கியது. அது தொடர்பாக அன்றைய தமிழ்த் தலைமை சிங்கள தேசியவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டமையும் இந்த இனத்துவ அடையாள இடைவெளியை ஆழமாக்கவே உதவியது.

காரணம் எதுவாயினும், நவீன இலங்கையில் இலங்கையர் என்னும் அடையாளத்துக்குப் பதிலாகச் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற அடையாளங்களே வலுப்பெற்றன. இலங்கையில் முஸ்லிம்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருப்பினும் தங்களைத் தமிழர் என்று அடையாளப்படுத்துவதில்லை என்பது முக்கியமான அம்சம். தமிழ்நாட்டில் நிலைமை அப்படியல்ல. இங்கு இஸ்லாமியர் ஒருவர் தன்னைத் தமிழர் என்றோ இஸ்லாமியத் தமிழர் என்றோ தமிழ் முஸ்லிம் என்றோ அழைப்பதை ஏற்றுக்கொள்வார். ஆனால் இலங்கையில் அப்படியல்ல.

இலங்கையில் அது வெறும் சமய அடையாளம் அல்ல. அது இனத்துவ அடையாளமாகத்தான் இருக்கிறது.

ஆக, ஈழத் தமிழர்கள் என்று பேசும்போது அது ஒரு தனி அலகு அல்ல என்பதை நாம் மனம்கொள்ள வேண்டும். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அடையாள அரசியலில் இன்னொரு மாற்றம் வருகிறது. இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காகப் பிரித்தானியர் தமிழ்நாட்டிலிருந்து கூலித் தொழிலாளர்களைக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் காலப்போக்கில் பத்து இலட்சத்திற்கு அதிகமாகப் பெருகி தனி இனக் குழுவாக உருவாகிறார்கள். அவர்கள்தான் மலையகத் தமிழர்கள் என்று இப்போது அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் பெரிய ஒட்டுறவு இல்லை. அவர்களுடைய சமூக, அரசியல், பொருளாதார நலன்கள் இவர்களுடையதிலிருந்து வேறுபட்டவை. மலையகத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்மீது - குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்மீது - கொஞ்சம் எதிர்ப்புணர்வோடுதான் இருந்தார்கள். ஏனென்றால், மலையகத்தில் கிளார்க்குகளாகவோ ஆசிரியர்களாகவோ டாக்டர்களாகவோ



நிருவாகப் பதவிகளில் பணியாற்றியவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழர்களே. மலையகத் தமிழர்கள் இவர்களைத் தங்கள்மீது ஆதிக்கம் செலுத்த வந்தவர்களாகவே கருதினார்கள். மலையகத் தமிழர்களின் பிரச்சினை முற்றிலும் வேறானது. இலங்கையில் மிக மோசமான ஒடுக்குமுறைக்கு ஆளான மக்கள் அவர்கள்தான். அவர்கள் மிக மோசமாகச் சுரண்டப்பட்டவர்கள். சுதந்திரத்துக்குப் பின்னர் மலையகத் தமிழர் தமக்கென்று தனித்துவமான அடையாளமுள்ள இனக்குழுவாக உருவாகிவிட்டனர்.

ஈழத் தமிழர் என்பது அங்கே நீண்டகால வரலாறு உடைய வடக்கு - கிழக்குத் தமிழர்களைத்தான் குறிக்கும். இந்தியத் தமிழர் அல்லது மலையகத் தமிழர் என்பது மத்திய மலைநாட்டில் தோட்டங்களில் வேலை செய்வதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்களின் வம்சாவளியினரைக் குறிக்கும். இவர்களுக்கு சுமார் இருநூறு வருட வரலாறு உண்டு. தமிழ் பேசும் இலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு ஆயிரம் ஆண்டு வரலாறு இருக்கிறது. ஆக இன்று இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகப் பேசும் சமூகத்தினர் மூன்று தனித்துவமான இனக்குழுமங்களாக உள்ளனர். இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் என இவர்கள் இனங்காணப்படுகின்றனர். இலங்கை அரச ஆவணங்களில், குடிசனக் கணக்கெடுப்பில் இந்தப் பிரிவுகள் இடம்பெற்றுவிட்டன. இலங்கையில் தமிழர் என்ற பதம் இம்முப்பிரிவினரையும் உள்ளடக்காது. இலங்கை அரசியலில் தந்தை செல்வா (எஸ். ஜே. வி. செல்வநாயகம்) காலத்திலிருந்து தமிழ் பேசும் மக்கள் என்னும் பதம் இம்முப்பிரிவினரையும் உள்ளடக்கப் பயன்படுத்தப்பட்டுவருகிறது. இது மொழியியல் கருத்துத்தான். அரசியல் கருத்து அல்ல. இவர்களுடைய சமூக, பொருளாதார, அரசியல் நலன்கள் வேறுபட்டவை. சில வகையில் முரண்படுபவை. தமிழகத்தினருக்கு இவ்வேறுபாடு புரிவதில்லை. அதைப் புரிந்துகொள்ள அவர்கள் விரும்புவதும் இல்லை. ஈழம், ஈழத் தமிழர் என்பதை எவ்வித அரசியல் புரிதலும் இல்லாமல் அவர்கள் பேசுகின்றனர்.

## காடு பெருசா அழகா இருந்துச்சு

**யாழினி**



ஒன்பது வயது யாழினி சொல்லி, யாழினியின் அம்மா எழுதி பிறகு திருத்தம் செய்யப்பட்டு வெளியான கதைத் தொகுப்பு, காடு பெருசா அழகா இருந்துச்சு. "கதை சொல்லியும் ரொம்ப நாளாச்சு. கேட்டும் ரொம்ப நாளாச்சு" என்று ஆதங்கத்துடன் புத்தகத்தை அறிமுகம் செய்யும் கல்யாண்ஜி, இப்படி முடித்துக்கொள்கிறார். "பேசாம யாழினியாகவே இருந்திருக்கலாம். யாழினியோட உலகத்திலதான் ஆட்டுக்குட்டி காட்டுக்கு விளையாடப் போகும். மானை விளையாடக் கூப்பிடும்" எறும்பு, பல்லி, பூச்சி, நாய்க்குட்டி, பூனைக்குட்டி எல்லாம் ட்ராகன் ட்ராகனா மாறி என்னென்ன உதவிகள் எல்லாம் பண்ணும்... உண்மையில் சொல்கிறேன். நான் யாழினியாகவே பிறந்திருக்கலாம்...

வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த உணர்ச்சி தொற்றிக்கொள்வது உறுதி. ஏன் அப்படி என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் பூனைக்குட்டிக் கதை.

**பூனைக்குட்டிக் கதை**

ஒரு ஊர்ல ஒரு பூனைக்குட்டி இருந்திச்சாம். அதுக்கு காட்டுக்குப் போய் வெளாடற துன்னா ரொம்ப புடிக்குமாம். ஒருநாள் காட்டுக்கு வெளாடப் போச்சாம். அங்க சிங்கம் இருந்திச்சாம். பயந்துபோய் திரும்ப வந்திருச்சாம்.

மறுநாள் காட்டுக்குப் போச்சாம். அன்னிக்கு சிங்கம் இல்லையாம். குருவி கூட, அணில் கூட ஜாலியா வெளாண்டுச்சாம். இப்படியே தினமும் காட்டுக்குப் போய் வெளாண்டுச்சாம். ஒரு நாள் சிங்கம் வந்துச்சாம். பயந்து போன பூனைக்குட்டி ஓடி வந்து யாழினியோட வயித்துக்குள்ள போயிருந்துகிச்சாம்.

அப்புறம் யாழினி சாப்பிட்டா அதுவும் சாப்பிடுமாம். யாழினி ஜூஸ் குடிச்சா அதுவும் குடிக்குமாம். யாழினி ஐஸ்கிரீம் சாப்பிட்டா அதுவும் ஐஸ்க்ரீம் சாப்பிடுமாம். இப்படியே சாப்பிட்டு சாப்பிட்டு வயித்துக் குள்ள பூனை குண்டாயிடுச்சாம். யாழினிக்கு அடிக்கடி கோபம் வரும். அப்படி ஒரு நாள் கோபத்தில் கத்தினாளாம். அப்ப வயித்துக்குள்ள இருந்த பூனைக் குட்டி வாய் வழியா குதிச்சுக் காட்டுக்கு ஓடிப் போச்சாம். குண்டா இருந்த பூனைக்குட்டி காட்டுக்கே ராஜா ஆயிடுச்சாம்.

- நன்றி: ஆழம்

அமெரிக்காவின் விஸ்கோன்சின் மாகாணத்தில் உள்ள கிரீக் பகுதியில் அமைந்துள்ள சீக்கிய 'மத வழிபாட்டுத் தலத்தில் மிக்கேல் பேஜ் என்பவர் ஆகஸ்ட் 5ஆம் திகதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 4 பேர் இந்தியாவைச் சேர்ந்த சீக்கியர்கள். சீக்கியர்கள் அமெரிக்காவில் தாக்கப்படுவது இது முதல்முறையல்ல. கடந்த 10 ஆண்டுகளில் அவர்களுடைய வழிபாட்டுத் தலங்கள், இருப்பிடங்கள், வர்த்தக இடங்கள் ஆகியவற்றின்மீது 700இற்கும் அதிகமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னதாக கொலராடோ மாகாணத்தில் உள்ள அரோரா பகுதியில் உள்ள திரையரங்கில் இதேபோல் நடந்த மற்றொரு துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

"இதுபோன்ற பயங்கரமான, துயரமான நிகழ்வுகள் நடப்பது அதிகரித்துள்ளது. இப்படி நடக்காமல் இருக்க நம் ஆன்மாவைத் தேடும் வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. வன்முறையைக் குறைக்க இன்னும் கூடுதலாக ஏதேனும் வழிகளை ஆய்வு செய்யவேண்டியிருக்கிறது" என்கிறார் ஒபாமா.

## மீண்டும் துப்பாக்கி



# கிழக்கில் பலிக்காத கணக்குகள்!

- மப்றூக் கட்டுரையிலிருந்து.

பெரிதாக தலையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. கிழக்கு மாகாணசபையில் என்ன நடக்குமென்று பந்தயம் கட்டுமளவுக்கும் நிலைமைகளுமில்லை. ஆளும் ஐ.ம.சு.முன்னணி - மு.காங்கிரஸ் கூட்டிணைவில்தான் ஆட்சியொன்று அமையும்.

"மத்திய அரசாங்கத்தில் மு.காங்கரஸ் இருந்து கொண்டு, கிழக்கு மாகாணத்தில் த.தே.கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முடிவு எடுப்பதென்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்" என்று மு.காங்கிரஸின் பிரதித் தலைவர் ஹாபீஸ் நஸீர் தெரிவித்துள்ளார். இவர் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மு.கா. சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்.


ஹாபீஸ் நஸீர்

ஆனாலும், கிழக்கு மாகாணத்தில் ஆட்சிமைப்பதற்கு தம்முடன் இணையுமாறு மு.காங்கிரஸை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வற்றுபுறுத்தியது. அப்படி இணைந்தால், முதலமைச்சர் பதவியினை மு.கா.வுக்கு சுழற்சி முறையில் வழங்கத் தயார் என்றும் சொல்லியது. மு.கா. இதற்கு இணங்காது போனால், அது - வரலாற்றுத் துரோகமாகி விடும் என்று த.தே.கூட்டமைப்பு அச்சமூட்டியது.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், த.தே.கூட்டமைப்புடன் இணைவதை விடவும் ஆளும் ஐ.ம.சு.முன்னணியுடன் இணைவதுதான் மு.கா.வின் கணக்கில் லாபமாகும். தவிரவும், பிணக்கு அரசியலை விடவும் இணக்க அரசியலிலேயே மு.கா. ஆர்வம் காட்டி வருகிறது. அதேவேளை, கிழக்கில் த.தே.கூட்டமைப்புடன் மு.கா. இணைந்து கொண்டால் மத்திய அரசாங்கத்திலிருந்து அந்தக் கட்சி விலக வேண்டியேற்படும். எனவே, ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெறுவதை விடவும், இரண்டையும் வைத்துக் கொள்வதையே மு.கா. விரும்பும். அதனால், கிழக்கில் மு.கா.வின் ஆதரவு ஆளும் ஐ.ம.சு.முன்னணிக்குத்தான்.

திறந்து சொன்னால், தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தனது இலாபத்தினை முன்னிறுத்தியே கிழக்கு மாகாணசபையில் தம்முடன் இணைந்து ஆட்சியமைக்க வருமாறு மு.காங்கிரஸுக்கு கோரிக்கை விடுக்கின்றது. ஐ.ம.சு.முன்னணியுடன் இணைவதைத் தவிர்த்து த.தே.கூட்டமைப்புடன் மு.கா. இணைவதென்பது மு.கா.வுக்கு நஷ்டமாகும்! அரசியல் என்று வரும்போது, இந்த இலாப - நஷ்டக் கணக்கினை மு.கா. நிச்சயம் பார்க்கும். "சரி, நமக்கு இலாபமில்லாது விட்டாலும் பரவாயில்லை, த.தே.கூட்டமைப்பின் நலனுக்காக ஆதரவு வழங்குவோம்" என்று மு.கா. யோசிப்பதற்குரிய கள நிலைவரமும் இங்கு இல்லை! காரணம், அப்படி விட்டுக் கொடுக்குமளவு தமிழ் - முஸ்லிம் அரசியல் உறவு இங்கு ஆரோக்கியமானதாக இல்லை என்பது கசப்பான உண்மையாகும்!

முஸ்லிம்களின் தனி இன அடையாளத்தையும், அவர்களுக்கான தேசியத்தினையும் த.தே.கூட்டமைப்பினர் திறந்த மனதுடன் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும், முஸ்லிம் சமூகத்தை "தமிழ் பேசும் மக்கள்" என்கிற பொதுமைக்குள் வைத்துத்தான் த.தே.கூட்டமைப்பின் தலைமைத்துவம் இற்றைவரை பேசிவருவதையும் முஸ்லிம் சமூகம் கடுமையான வெஞ்சினத்துடனேயே பார்க்கிறது. கடந்த தேர்தல் மேடையொன்றில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் உரையாற்றும்போது, "முஸ்லிம்களின் தேசியத்தினை ஒளித்து மறைத்துப் பேசும் கபடத்தனத்தினை தமிழ் தேசியம் கைவிட வேண்டும்" என்று கூறியதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.


ஆக, அரசியல் அரங்கில் தமிழ் - முஸ்லிம் உறவுக்குரிய அடித்தளமே இன்னும் இடப்படாததொரு நிலையில்தான், த.தே.கூட்டமைப்புடன் மு.கா. இணைந்து கிழக்கில் ஆட்சியமைக்க வேண்டும் என்று நாம் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இதுதான் யதார்த்தம்!



இந்த நிலையில், ஐ.ம.சு.முன்னணியுடன் மு.கா. இணைந்து ஆட்சியமைத்தால் அது வரலாற்றுத் துரோகமாக அமைந்து விடும் என்று த.தே.கூட்டமைப்பினர் கூறுகின்றார்கள். இவ்வாறான துரோகங்கள் வரலாறு முழுக்க நிறைந்து காணப்படுகின்றன. உதாரணமாக, 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தாமும் ஒரு தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று முஸ்லிம் சமூகம் சார்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தமிழ்த் தரப்பினால் தட்டிக் கழிக்கப்பட்டதையும், அதை த.தே.கூட்டமைப்பின் இதே தலைமைகள் ஆமோதித்து நின்றதையும் முஸ்லிம் சமூகம் தமக்கிழைக்கப்பட்ட ஒரு வரலாற்றுத் துரோகமாகவே இன்றுவரை பார்க்கிறது.

இப்படி எழுதுவது யாருக்கும் கசக்கக் கூடும். அல்லது, என்மீதும் இந்த எழுத்தின் மீதும் இனவாதச் சாயத்தை யாராவது எடுத்து விசிறவும் கூடும். அவ்வாறான விபத்துகளும் ஆபத்துக்களும் இப்படி எழுதுவதால் ஏற்படும் என்பதை நான் மிக நன்றாக உணர்கிறேன். ஆனாலும், இதை எழுதுவதைத் தவிர வேறு வழியில்லை! "முன்னங்கை நீண்டால்தான் முழங்கை நீளும்" என்பார்கள். முழங்கை நீளும் போது முன்னங்கை நீண்டே ஆகவேண்டும்! ஆனால், துரதிர்ஷ்டவசமாக தமிழ் - முஸ்லிம் அரசியல் அரங்கில் முன்னங்கையும் நீளவில்லை, முழங்கையும் நீளவில்லை!

## ஒட்டகச்சிவிங்கி




ஒட்டகச்சிவிங்கியின் பின்கால்கள்தான் அதனுடைய தற்காப்பு ஆகும். ஆபத்துக் காலத்தில் அந்தக் கால்கள் மூலம் ஓர் உதைவிட்டால் அந்த உதை ஒரு சிங்கத்தைக் கூட வெல்லும் வலிமையுடையதாகும். ஒட்டகச்சிவிங்கி தண்ணீர் கிடைக்காத சமயத்தில் புல்லின் மீதுள்ள பனித்துளி, இலைகள் மீது படர்ந்துள்ள பனித்துளி ஆகியவற்றை உட்கொள்ளும். ஒட்டகச்சிவிங்கி தன் நீண்ட கால்களை அகலமாக வைத்து கழுத்தை தரைக்குக் கொண்டு வந்து தண்ணீர் பருகும். ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு 40-50 செ.மீ. நீளம் இருக்கும். கருப்பு, நீலம், ஊதா, பிங்க் ஆகிய வர்ணங்கள் ஒட்டகச்சிவிங்கியின் நாக்கில் இருக்கும்.

# கொம்பனி

COMPANY - இது ஒரு ஹிந்தித்திரைப்படம் 2001இல் வெளிவந்தது இப்போது தான் பார்க்கக் கிடைத்தது. படம் இப்படித் தொடங்குகிறது. "பருந்து...




தன் இரையை குறிவைக்கிறது கண்காணிக்கிறது: சில மணித்தியாலங்கள் சில நாட்கள்: சில வாரங்கள்: ஏன் சில மாதங்கள் - உரிய வேளைக்காக உயரத்தில் வட்டமிடுகிறது. அந்த வேளை மிகச்சரியான அந்த வேளை வந்ததும் "லாக்"

ஆம் பாதள உலகினர் இவ்வாறு தான் இயங்குகிறார்கள். கண்காணிப்பும் தொடர்பாடலும் அவர்களுக்கு இரு கண்கள் போன்றது. ஒரு பொலிஸ் உயர் அதிகாரி பாதாள உலகினர் பற்றிய தனது அனுபவத்தைப் பதிவு செய்வதாக இத்திரைப்படம் ராம்கோபால் வர்மாவினால் மிகச்சிறப்பாக இயக்கப்பட்டுள்ளது.

மும்பை நகர்புறச்சேரிகளில் சில இளைஞர் குழுக்களின் (GANGSTERS) உருவாக்கம். அவர்களுக்கிடையிலான தொடர்பாடல், பிரபல்யம், சேர்ந்தியங்குவதற்கான பேரம்பேசல்கள், சேர்ந்து இயங்குதல், தலைமை உருவாக்கம், போட்டியாளரை அழித்தல் என ஒரு பாதாள உலகக்குழு எவ்வாறு வளர்கிறது: பலம் பெறுகிறது என்பதையும் அரசும், அரசியல்வாதிகளும், சமூகப்பிரமுகர்களும்!? அவர்களை எவ்வாறு உபயோகப்படுத்துகிறார்கள் என்பதையும் இத்திரைப்படம் நேர்த்தியாக விபரிக்கின்றது.

சினிமா, சுங்கம் வர்த்தகம், பாதுகாப்பு, கல்வி முதலிய இன்னோரன்ன துறைகளில் ஊடுருவி இத்துறைகள் சார்ந்த தலைவிதிகளை இவர்கள் எவ்வாறு தீர்மானிக்கிறார்கள் அல்லது மாற்றுகிறார்கள் என்பதை நுணுக்கமாகக் காட்டுகிறது இத்திரைப்படம்.

மேலும் சர்வதேசரீதியிலான அவர்கள் வலைப்பின்னல் ஸ்தாபகம் அவர்களுக்கேயான தனித்துவ ரீதியும் நியாயங்களும் காதலும் அன்பும் சுவாரசியமாக விளக்கப்படுகிறது. தவறான புரிந்துணர்வு ஒன்றால் பாதாள உயர்மட்ட தலைவர்களுக்குள் ஏற்படும் பிரிவும் அதன் விளைவாக அயல் நாடுகளிலும் மும்பையின் சந்து பொந்துகளில் நடக்கும் கொலைகளும் பொலிஸாரின். கையாலாகாத்தனமும் மக்களின் குழப்பமும் தங்களின் குட்டுக்களும் வெளிப்படலாம் என்ற அரசியல்வாதிகளின் அச்சமும் அதிர்ச்சியும் பாதாள உலகத்தினரிற்கேயான பரபரப்புடனும் த்ரில் உடனும் சொல்லப்படுவது இலங்கையில் நடந்த படுகொலைகளை ஞாபகப்படுத்துகிறது அல்லது




புரியவைக்கிறது.


இறுதியில் நேர்மையான பொலிஸ் அதிகாரி ஒருவரால் அவர்களில் ஒருவர் கென்ய நாட்டில் காயமுற்ற நிலையில் கைதுசெய்யப்படுவதையும் அதன் மூலம் அப்பாதாளக்குழு ஒடுக்கப்படுவதையும் ஆனாலும் சிறிய அளவிலாவது அதன் செயற்பாடுகள் மூன்றாம் மட்ட தலைவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுவதையும் யதார்த்தமாகவும் உணர்ச்சிகரமாகவும் சொல்லியிருக்கிறார் இயக்குனர். கைதுசெய்யப்பட்ட பாதாளத் தலைவரை சந்தித்து தன்னைப்பற்றிய உண்மைகளை சொல்லிவிடாதே என இரகசியமாக வேண்டுகோள் விடும் உள்துறை அமைச்சரை அவரது மெய்பாதுகாவலரது துப்பாக்கியாலேயே சுட்டுக்கொல்வது அருமையான 'திடுக்' பலரது தலைவிதியை நிர்ணயித்த ஒருவர் சாதாரண ஆயுள்கைதியாகி குற்றமனப்பான்மையால் வெதும்புவது வாழ்க்கையின் சூழலை காட்டுகிறது. அஜய் தேவ்கான், விவேக் ஒபராய், மோகன்லால் ஆகியோர் பிரமாதமாக நடித்துள்ளனர். இதை விட படத்தின் தொழில் நுட்ப அம்சங்களும் கமெரா கோணங்களும் பின்னணி இசையும் ஒரு வித்தியாசமான நல்ல படத்தைப் பார்த்த உணர்வைத் தருகிறது. ஆங்கில உபதலைப்புள்ள டி.வி.டி.யில் பார்ப்பது புரிதலை இலகுவாக்கும். படம் பார்த்த பின்பு இலங்கையில் இடம் பெற்ற படுகொலைகள் ஞாபகத்திற்கு வருவது தவிர்க்க முடியாதது.



வரம் ஒரு பாடசாலை




# தேவைகள் தீருமா? காத்திருக்கும் பாடசாலை


2011இல் புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்

## எமது பாடசாலை பற்றி...

1930 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி அன்று காலஞ்சென்ற வர்த்தகர் ஆ.குட்டிப்பிள்ளை மங்கள விளக்கேற்ற, சபாதிக்குருக்கள் பிள்ளையார் பூசை செய்ய, சி. வைத்திலிங்கம் என்பவரது தலைமையில் பலரின் உதவியுடனும் ஆசியுடனும் அத்திவாரம் போடப்பட்டது. 1962 ஆம் ஆண்டு அரசு பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டது.

இப்பாடசாலையில் இருபாலை, கட்டப்பிராய், கல்வியங்காடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். தற்போது 193 மாணவர்களும் 10 ஆசிரியைகளும் கல்வி கற்பிக்கின்றனர். புலமைப்பரிசில் பரீட்சையில் 2011இல் 07 பேரும், 2010இல் 03 பேரும், 2009இல் 02 பேரும், 2008இல் 11பேரும், 2007இல் 08 பேரும் சித்தியடைந்தனர்.

வருடாவருடம் நடைபெறுகின்ற கோட்ட மட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள், விரைவு கணிதப்போட்டி, திருக்குறள் மனனப்போட்டிகள், சமய அறிவுப்போட்டிகள் போன்றவற்றில் சாதனை படைத்துள்ளனர்.

எதிர்காலத்தில் மாணவருக்கு ஆங்கிலம், தகவல் தொழினுட்பம், இணைப்பாடவிதான செயற் பாடுகள் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொள்ளச் செய்வதன் மூலம் சமநிலை ஆளுமைமிக்க ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்க வேணடும் என்பதே ஆகும். அதற்கு மேற்குறிப்பிட்ட பௌதிக வளத் தேவைகள் ஓரளவிற்காவது நிறைவேற்றித்தரப்படவேண்டும். இதற்குப் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது எமது பாடசாலைச் சமூகம்.


பாடசாலை ஆசிரியர் குழாம்...



எமது பாடசாலையின் தோற்றம்

### திருமதி கௌ.பரந்தாமன் அதிபர்



05.04.2012 தொடக்கம் புதிய அதிபராக நியமனம் பெற்றார். பாடசாலைக்கட்டடத்தொகுதி 50 வருடங்களுக்கு மேல் பழைமைவாய்ந்ததால் கூரைவேலை, நிலவேலை, கதவுகள், பூட்டுக்கள் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டிய தேவையுள்ளது. கட்டடத்தொகுதி முழுவதும் உரஞ்சப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்படவேண்டும். சிறுவர் முற்றம் தற்போது அமைக்கப்பட்டுள்ள இடம் நெருக்கடியாக இருப்பதால் வேறு இடத்திற்குமாற்றப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும்.

வயக்கல்வித்திணைக்களத்தினால் அமைக்கப்பட்டு தரப்பட்ட கனிணி அறை லெவல் சீற் அடிக்கப்படவில்லை. நிலம் சீரமைக்கப்படவில்லை. கணினிகளும் போதாது.

வகுப்பறைகளுக்கான ஆசிரியர் மேசை போதாது. மாணவர்களுக்கு உரிய தளபாடங்களும் போதாமல் உள்ளன. ஆசிரியர்கள் பொருட்களை வைத்து எடுப்பதற்குரிய அலுமாரிகளும் இல்லை. இவற்றை அதிபர் என்ற கடமையில் இருந்து எதிர்பார்க்கிறேன்.

# கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் சமூக நலனிலும் அக்கறை காட்டவேண்டும்



(யாழ்ப்பாணம்)

கால்நடை வளர்ப்போர் சமூக நலனில் அக்கறையுடையவர்களாக செயற்படவேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காரைநகர் பிரதேசத்தில் விவசாயச் செய்கையை மேம்படுத்தும் வகையில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் அண்மையில் காரைநகர் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டாக்காலி கால்நடைகளை முழுமையாகக் கட்டுப்படுத்த கால்நடை வளர்ப்போர் சமூக நலனில் அக்கறையுடையவர்களாக செயற்படும் போதே அது சாத்தியமாகும். விவசாயச் செய்கையை மேம்படுத்த கால்நடை வளர்ப்போர் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலமே விவசாயத்தினூடு எமது தேசம் தன்னிறைவடையும் என அவர் தெரிவித்தார்.

காலபோக பயிர்ச்செய்கையின் போது வயல்நிலங்களில் கட்டாக்காலி கால்நடையை உரிய திணைக்களமும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காரைநகர் பிரதேச சபையும் கட்டுப்படுத்தவேண்டும் எனவும், கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கால்நடை வளர்ப்போருக்கு ஒலிபெருக்கி, பத்திரிகைகள் மூலம் பொது அறிவித்தல் விடுமாறும் அவர் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, பிடிக்கப்படும் கட்டாக்காலி கால்நடைகளிற்கு பிடிபணமாக 2500 ரூபாவும்,கால்நடைகளிற்கான பராமரிப்பு செலவாக 1200ரூபாவும் அறவிடுவது எனவும், பிடிக்கப்படும் கால்நடைகள் மூன்று நாட்களிற்கு பராமரிக்கப்படும் எனவும் பிடிக்கப்படும் கட்டாக் காலி கால்நடைகளில் நல்லின கால்நடைகளை கால்நடை திணைக களத்திற்கு வழங்குவது எனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில், விவசாய திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக்நிறஞ்சன், ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித்தலைவருமான வீரமுத்து கண்ணன், காரைநகர் பிரதேச சபை செயலாளர் கனகதுரை, தவிசாளர் ஆனைமுகத்தோன், பிரதேச சபை உறுப்பினர் பாலச்சந்திரன், விவசாய திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. யாழ். மாவ்ட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலென்ரின், முருகேசு சந்திரகுமார் ஆகியோர் தமது நிதி மூலம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கென 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளனர்.

இதன்படி அமைச்சர் மற்றும் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் இணைந்து வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், மகாத்மா விளையாட்டுக்கழகத்திற்கு மைதானப் புனரமைப்புக்கென 1 இலட்சம் ரூபாவும்,

மேலும் முருகேசு சந்திரகுமார் காந்திஜி சனசமூக நிலையத்தின் புனரமைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும், சாந்தை சனசமூக நிலையத்தின் தளபாடக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், உதயதாரகை சனசமூக நிலையத்தின் தளபாடக் கொள்வனவிற்கென 50 ஆயிரம் ரூபாவும்,யூனியன் விளையாட்டுக்கழத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், இலங்கை மாதா சனசமூக நிலையத்திற்கு தள பாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், சகாயமாதா தேவாலயத்திற்கு மணிக்கோபுர தூண் அமைத்தலுக்கு 50 ஆயிரம் ரூபாவும், புனித யுதாதேயு தேவாலயத்திற்கு மணிக்கோபுர தூண் அமைத்தலுக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதிஒளி சனசமூக நிலையத்தின் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், ஸ்ரீ ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார்.

# ஊடக வளங்கள் பயிற்சி மையத்தால் “குத்துவிளக்கு” திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

“குத்துவிளக்கு” திரைப்படம் நாளை காலை 9.30 மணிக்கு ஜும்மா பள்ளி ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் திரையிடப்படவுள்ளது என யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது.

1971ஆம் ஆண்டு வெளியாகிய இத் திரைப்படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்டு 100 நாட்களை கடந்து சாதனை படைத்த திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களின் ஒன்றிணைவில் உன்னதமான தமிழ்த்திரைப்படம் உருவாக வேண்டும் என்ற துரைராஜாவின் எண்ணத்தின் உருவமே ‘குத்துவிளக்கு’ திரைப்படம். இலங்கை கலாசாரத்தை பிரதிபலிக்கும் முகமாக இலங்கை கலைஞர்களைக் கொண்டே உருவாக்கப்பட்ட இத்திரைப்படத்தை டபிள்யு. எஸ்.மகேந்திரன் இயக்கியுள்ளார். ஈழத்து இரத்தினம் அவர்கள் இத்திரைப்படத்திற்கான திரைக்கதை வசனம் மற்றும் பாடல்களை எழுதியுள்ளார். டபிள்யூ எஸ். மகேந்திரன் ஒளிப்பதிவாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரைப்படத்தின் கதாநாயகனாக அச்சுவேலி நமசிவாயமும் கதாநாயகியாக பிரபல நாட்டிய தாரகை லீலா நாராயணன் ஆகியோர் பாத்திரமேற்று நடித்துள்ளனர். அத்துடன் துணைநடிகர்களாக மேடை அனுபவம் மிக்க பலர் நடித்துள்ளனர்.

1971ஆம் ஆண்டு இடம்பெற்ற ‘குத்துவிளக்கு’ திரைப்பட ஆரம்ப விழாவை இந்திய பிரபல நடிகை சௌகார் ஜானகி ஆரம்பித்து வைத்தார்.

இத்திரைப்படத்தின் காட்சிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள், குளங்கள் வயற்பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு, கண்டி மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களிலும் படப்பிடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக நல்லூர் மற்றும் செல்வச்சந்நிதி ஆகிய உற்சவக் காலங்களும் இத்திரைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

தேசிய விழிப்புணர்ச்சியைத் தூண்டியுள்ள முதல் தமிழ்ப் படைப்பாகவும் ‘குத்துவிளக்கு’ திரைப்படம் விளங்கியிருந்தது.

மனிதனுக்கு அடிமையாக இருக்க வேண்டிய பணம் மனிதனை அடிமை ஆக்குகின்றது. என்பதும் சமுதாயத்தில் விவசாயிகள் படும் துன்பங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் சீதனப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினைகள், சாதிப் பிரிவினைகள், ஏழைப் பெண்களின் உண்மைக் காதல் மற்றும் பணக்கார ஆண்களின் பொழுதுபோக்குக் காதல் என்பவை மிக தத்ரூபமாக இத்திரைப்படத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

1975ஆம் ஆண்டு டில்லியில் இடம்பெற்ற உலகத்திரைப்பட விழாவில் ‘குத்துவிளக்கு’ திரைப்படம் திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு படைப்பாளிக்கு மிகவும் தேவையான ஒரு இயல்பு, ஒரே விஷயத்தை ஒன்றுக்கும் மேற்பட்ட கோணத்திலிருந்து பார்ப்பது. இதுதான் படைப்பிலக்கியத்தினைச் செலுத்தக்கூடியதும் கூட. ஆனால், படைப்பாளி என்று சொல்லிக் கொண்டிருக்கும் பலரிடமே கூட நடைமுறையில் இலக்கியம் சாராத சாதாரண விஷயத்திலும், வேறு ஒருவரின் கருத்தை முன்முடிவுகளோ அனுமானங்களோ இல்லாமல் கேட்டு உள்வாங்கிக் கொண்டு யோசிக்கும் தன்மை இல்லாதிருக்கிறது. மற்றவரின் கோணத்தில் பார்க்கக்கூடிய இயல்பு மட்டும் இருந்துவிட்டால், அநாவசியமான சச்சரவுகள் தவிர்க்கப்படும். இது ஒரு பொதுவான குறைதான். அப்படியே மற்றவரின் கோணத்தில் பார்க்க முடிந்து பார்க்கும் ஒரு சிலர் விதண்டாவாதமாக தான் சொன்னதே சரியென்று பிடிவாதம் பிடிப்பதும் கூட பல பிரச்சினைகளுக்கும் அநாகரிகமான பூசல்களுக்கும் சாடல்களுக்கும் வழி விடுகின்றன. **– எர்னஸ்ட் மண்டேல்**

புறத் தகவல்கள் நிரம்பிய கதைகளாக இருப்பதால் தற்காலச் சமூகமும் சூழ்நிலையும் என் கதைகளில் நிறையவே இருக்கின்றன. தனிமனித மனப்போக்கின் விபரீதங்களுடன் சமூக சமுதாய அமைப்புக்கள் மனிதன் மீது செலுத்தும் பாதிப்பும் ஆளுமையும் நிறையவே பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பல புயல்களையும் புரட்சிகளையும் உருவாக்கக் கூடியவை. ஆனால் என்னை ஒரு புரட்சியாளனாக நான் கற்பித்துக்கொள்ள முடியவில்லை. ஒரு ஜனசமூகத்தை அல்லது கூட்டத்தை தலைமை தாங்கி அழைத்துச் செல்லும் தகுதி நான் பெற்றிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இதை நான் அடக்கம் காரணமாகச் சொல்கிறேன் என்றில்லை. உண்மைநிலையே அதுதான். நான் உலகத்தை விமர்சித்து எழுதினாலும் தனிமையில்தான் எழுதப் பயிற்சி மேற்கொண்டவன். எந்த அளவுக்கு நான் பிறர் தலைவிதியை நிர்ணயிக்க முற்படலாம் என்பது பற்றி எனக்குச் சந்தேகம் இருக்கிறது. ஒருவன் ஒரு காரியத்தை ஒழுங்காகச் செய்தால் போதாதா? தன் பலங்களை உணர்வதைக் காட்டிலும் தன் குறைபாடுகளை ஒருவன் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவன் நான். புதிதாக எழுதத் தொடங்குபவர்களுக்கும் நான் இதைத்தான் ஒரே அறிவுரையாகக் கூறமுடியும். **– அசோகமித்திரன்**

திருமதி பிரமிளா ராணி பள்ளி இறுதிவரை படித்தவர். படிப்பில் மிகவும் ஆர்வம் கொண்டவர். பின்னால் பிறந்த தங்கைகளைப் போஷித்துப் பள்ளிக்கு அனுப்புவதற்காக இவர் பள்ளியை விட்டு நிறுத்தப்பட்டார். அம்மாவுக்கு உதவியாக இருக்க மூத்த பெண்ணுக்கு இந்த அவலம் எங்கள் குடும்பத்தில் இருந்தது. பள்ளிக்கூடத்து ‘சாம்பியன்களில்’ இவர் முதல்வர். தென்னாற்காடு விளையாட்டு வீரர்களில் பெயர் அறியப்பட்டவர். என்னைத் திருமணம் செய்துகொண்ட ஒரு காரணத்துக்காகத் தன் ஆசைகளை, தன் முன்னேற்றத்தை இழந்துபோனார். எல்லா உயர்ந்த குணங்களையும்கொண்ட அவருக்கு எந்த வகையிலும் தகுதியான கணவன் அல்லன் நான். தன் வாழ்க்கையையே எனக்குத் தந்த இவருக்கு நான் தந்தது எல்லாம் வறுமை, துன்பம், அவமானம் மட்டுமே. நான் சிதைத்த முதலும் கடைசியுமான பெண், என் மனைவி தான். அவரைப் பார்க்கும்போதெல்லாம் என் மனம் அளவு இல்லாத குற்ற மனப்பான்மையில் குமைகிறது.

1979இல் தொடங்கி இன்றுவரை பெரும்பாலான ஆண்டுகள் நான் சென்னையிலும் அவர் குழந்தைகளோடு புதுச்சேரியிலும் பிரிந்தே வாழ்கிறோம். ஊருக்குப் போகும்போதெல்லாம் பல சமயம் என் குழந்தைகள் பள்ளிக்கூட நாள்களிலும் வீட்டில் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்க்க நேரும். பள்ளிக்கூடம் போகவில்லை என்பார். காரணம் சொன்னதில்லை. சம்பளம் கட்டாததால், பள்ளியை விட்டு அனுப்பிவிடப்பட்டிருப்பார்கள் குழந்தைகள். அவர் கண்களில் நம்பிக்கை வறட்சி நிரந்தரமாகவே ஏற்பட்டுவிட்டது. எங்களுக்கிடையே காதல் சுத்தமாக வற்றிப்போய்விட்டது. வாழ்க்கையைப் பற்றி எழுதும்போது என் மனைவியைப் பற்றி எழுதாமல் எப்படி? ஆகவேதான் முதல்முதலாக இங்கு என் உணர்வுகளைப் பதிவுசெய்தேன். இனிமேல் இதுபற்றி நான் எழுத மாட்டேன்.... செல்லம்மாளின் துக்கத்தை, கமலாவின் துக்கத்தை என்னைக் காட்டிலும் பிறரால் துல்லியமாக விளங் கிக்கொள்ள முடியாது. நிச்சயமாக நான் பாரதியோ, புதுமைப்பித்தனோ இல்லை. மனைவிமார்களின் துக்கம் மட்டுமே விஷயம்! **– பிரபஞ்சன்**

# வாழ்வாதாரஉதவிகளை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வாழ்வாதாரத்திற்காக கிடைக்கப்பெறும் உதவித்திட்டங்களை பயனாளிகள் உரியமுறையில் பயன்படுத்தி அதன் உச்சப் பயன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமுர்த்தி திட்டத்தின் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் சமுர்த்தி திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதுடன், குலுக்கல் முறை மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசு முன்னைய அரசுகளைப் போலல்லாது பாரபட்சமின்றி செயற்பட்டு வருகின்ற நிலையில், தவறுகள் ஏதும் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அவற்றை நாம் திருத்திக் கொள்ளவும் தயாராகவிருக்கின்றோம் என்றும் சுட்டிக் காட்டிய அமைச்சர், யுத்தத்தின் பின்னரான இக்காலப்பகுதியில் அரசு பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் சமுர்த்தி குலுக்கல் முறை மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கிடைக்கப் பெறும் இவ்வாறான உதவிகள் மூலமாக தமது வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ளக் கூடிய வகையில் சரியான முறையில் அவற்றை பயன்படுத்தி மேம்பாடடைய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேந்திரன், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மோகனேஸ்வரன், பிரதேச செயலர் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# மக்கள் அதிகம் வாழும் பகுதிக்கு பேருந்து சேவை வழங்க வேண்டும்

(நயினாதீவு)

நயினாதீவு பிரதேசத்தில் மக்கள் அதிகம் வாழும் நயினாதீவு மகா வித்தியாலய வீதியூடாக பேருந்து சேவையொன்றை நடத்துமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

இப்பாடசாலை வீதி பிரதான வீதியாக காணப்படுவதுடன், மக்கள் அதிகம் வாழும் பிரதேசமாகக் காணப்படும் நிலையில் இப்பகுதி மக்கள் வெளியிடங்களுக்கு பயணத்தை மேற்கொள்ள வேண்டுமானால் நடந்தும், துவிச்சக்கர வண்டிகளிலும் செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வீதியூடாக அரச பேருந்து சேவையை நடத்தி மக்களின் சிரமங்களை நீக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதோடு, பல காலமாக திருத்தப்படாமல் இருக்கும் இவ்வீதியை துரிதகதியில் புனரமைப்புச் செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (175)

# சட்டவிரோத மீன்பிடியால் மீனவர்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நாயாறு கடல்நீரேரிப் பகுதியில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தி சிலர் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் தமது வாழ்வதாரம் பாதிக்கப்படுவதாக கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நாயாறு, செம்மலை கடற்தொழிலாளர்கள் முல்லைத்தீவு நீரியல் வளத்திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடற்பகுதியில் சட்ட விரோதமாக தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதால் தொழில்வளம் பாதிக்கப்படுவதுடன் வாழ்வதார ரீதியாகவும் தாம் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர்கள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

முறைப்பாடுகளை அடுத்து முல்லைத்தீவு நீரியல் வளத்திணைக்களத்தினர் பொலிஸாரின் உதவியுடன் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# சிறுவர் நாடகப் போட்டி

(வவுனியா)

வவுனியா தெற்கு வலய ஆரம்பக்கல்வி பிரிவினால் நடாத்தப்படும் கோட்டமட்ட சிறுவர் நாடகப்போட்டி நாளை நடைபெறவுள்ளதாக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசபாதம் தெரிவித்தார்.

இதன்போது வவுனியா நகர கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அக்குவைனஸ் கேட்போர் கூடத்திலும், செட்டிகுளம் கோட்டத்திற்கான போட்டிகள் செட்டிகுளம் மகாவித்தியாலய மண்டபத்திலும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (160)

# திவிநெகும வேலைத்திட்டத்தில் பணி ஆரம்பித்தனர் பட்டதாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 'திவிநெகும' வேலைத்திட்டத்தினுள் உள்வாங்கப்பட்ட பட்டதாரிப்பயிலுநர்கள் நேற்று தமக்கு ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்கான கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பிரதேச செயலகங்களில் அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சை சார்ந்த அதிகாரிகள் குழு நேர்முகத்தேர்வினை நடாத்தியிருந்தது. இதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கே தற்போது இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிகளில், திவிநெகும வேலைத்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டவர்களில் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தலா ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டு ஏனையோர் வேறு பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (26)

# வினா வங்கி செயலமர்வு

(வவுனியா)

வட மாகாண கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள 'உங்களுக்கு தெரியுமா?' மாகாண மட்ட விநாடி வினா போட்டிக்கான வினா வங்கி அமைப்பதற்கான செயலமர்வு இன்றும், நாளை சனி ஆகிய தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் வட மாகாணத்தை சேர்ந்த 12 வலயங்களில் இருந்தும் துறைசார் நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக வட மாகாண பதில் கல்விப்பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்தல் விடுத்துள்ளார். (160)

# மின்விளக்குகள் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு தலையாளி ஞானவைரவர் சனசமூக விளையாட்டுக் கழகத்தின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை கழகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஆ.ரவீந்திரதாஸன் முக்கிய பிரதிநிதியாக கலந்து கொண்டு நிலையத் தலைவர், செயலாளர்களுடன் அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது அமைப்பாளர் சனசமூக நிலையத் தலைவர் ந.சண்முகரத்தினத்திடம் ஒரு தொகு

தி மின் விளக்குகளைக் கையளித்தார்.

# நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் கீழ்ப்பிரிவு தரம் 6, 7, 8 உம், மத்திய பிரிவு தரம் 9,10, 11 உம், மேற்பிரிவு 11, 12 உம் என வகுக்கப்பட்டுள்ளதுடன், மூன்று போட்டிகளுக்கும் உரிய தலைப்புக்களாக கீழ்ப்பிரிவுக்கும் மத்திய பிரிவுக்கும் மது, புகை போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் எனவும், மேற்பிரிவுக்குரிய தலைப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்போம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைப் போட்டியில் கீழ்ப்பிரிவுக்கு 1000 சொற்களும், மத்திய பிரிவுக்கு 1250 சொற்களும், மேற்பிரிவுக்கு 1500 சொற்களுமாக அமைதல் வேண்டும்.

இப்போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்தி முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்ற போட்டியாளர்களின் விண்ணப்பங்களை 2 பிரதிகளில் தயாரித்து இணைப்பாளர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், அல்வாய் கிழக்கு அல்வாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.


மேற்படி போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் யாழ்.புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. எனவே இத்தகைய செயற்பாடுகளுக்கு பாடசாலை அதிபர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு வடமராட்சி நல்லொழுக்க நிறுவன தலைவர் பா.ரகுநாதன் அறிவித்துள்ளார். (109)

29. பின்வரும் வீதி சமிக்ஞை மூலம் குறிப்பிடப்படுவது யாது?




1. முன்னால் சிறுவர் கடவை
2. முன்னால் பாதசாரிகள் கடவை
3. முன்னால் பாதை வேலை

30. 

மூன்று வகையான மண் மாதிரிகள் சம அளவில் எடுத்து புனலினுள் பஞ்சு இடப்பட்டு புனலில் சம அளவான மண் A,B,C போத்தலில் இடப்பட்டது எனின் C புனலில் இடப்பட்ட மண் யாதாக இருக்கும்.

1. இருவாட்டி மண் 2. களிமண் 3. மணல்மண்


31. அருகில் தரப்பட்ட படத்தில் காட்டப்பட்டது போன்று நீர்கொண்ட முகவை ஒன்றில் தடி ஒன்றில் வெவ்வேறு பகுதியில் காட்டப்பட்டவாறு நீர் கொண்ட முகவையில் தடிவைக்கப்பட்டது எனின், A,B,C என்ற வித்துக்களில் எவ்வித்து நன்கு முளைத்திருக்கும்.



1. A 2. B 3. C


32. பொருத்தமற்ற தொடர்பினைத் தெரிவு செய்க.

A) புலன்கள் - உணர்ச்சிகள்
B) நாடகம் - கதாபாத்திரம்
C) கிராமம் - தொழிற்சாலை

33. 

இவ் மணிக்கூட்டில் காட்டும் நேரத்தை தளவாடி ஒன்றினூடாகப் பார்க்கும்போது காட்டும் நேரம் யாது?

1. 9 மணி 2. 3 மணி 3. 12 மணி 15 நிமிடம்

34. 


இவ்வென்னுருவில் மூன்று விளையாட்டிலும் பங்கு பற்றியவர்களைக் குறித்து நிற்கும் இடத்தை நிறம் தீட்டிக் காட்டுக.

35. 8 மாடுகள் 8 சாக்கு புல்லை 8 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு மாடு 8 சாக்கு புல்லைத் தின்று முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்.

1. 8 நாட்கள் 2. 64 நாட்கள் 3. 1 நாட்கள்

36. பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைகின்றது அதனைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தி | திகதி | கல்வி | விடுதி |
| 2. வீதி | திகதி | திம்பு | புதல்வி |
| 3. சங்கு | குளவி | குழந்தை | தையல் |

37. அகர வரிசையில் சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குரிய கருத்தை இலகுவில் விளக்கும் நூல் எது?

1. அகராதி 2. அரிச்சுவடி 3. நிகண்டு

38. 1 வாரம் 2 நாள் 4 மணித்தியாலங்களை மணித்தியாலத்தில் தருவது எது?

1. 220 மணித்தியாலங்கள் 2. 420 மணித்தியாலங்கள் 3. 7 மணித்தியாலங்கள்

39. 


அருகில் தரப்பட்ட தராசுத் தட்டுக்கள் சமநிலை அடைவதற்கு பாரம் குறைந்த தட்டில் வைக்க வேண்டிய நிறையைத் தெரிவு செய்க.

1. 750g 15000g, 2kg 2. 500g, 1kg, 2kg 3. 400g, 3000g, 800g

40. சித்திரை மாதம் 3 ஆம் திகதியிலிருந்து வைகாசி மாதம் 13ஆம் திகதி வரை உள்ள நாட்கள்.

1. 35 நாட்கள்
2. 41 நாட்கள்
3. 40 நாட்கள்




தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013
பகுதி - I
நேரம் 45 நிமிடம்

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

பழவகைகள் பலவற்றின் விலை கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 4 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.




01. அப்பிள் ஒன்றினதும், தோடம்பழம் ஒன்றினதும், பப்பாசி ஒன்றினதும் மொத்த விலை யாது?

1. ரூ. 38 2. ரூ. 34 3. ரூ. 22

02. மாம்பழம் ஒன்றினதும், பப்பாசி ஒன்றினதும் மொத்த விலை யாது?

1. ரூ. 32 2. ரூ. 16 3. ரூ. 12


03. மேலே தரப்பட்ட பழங்களில் ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு பழம் வாங்கச் செலவாகும் பணம் யாது?

1. ரூ. 22 2. ரூ. 34 3. ரூ. 44

04. ஆறு அப்பிள் பழங்கள் வாங்கும் பணத்திற்கு எத்தனை தோடம்பழங்கள் வாங்கலாம்.

1. 05 2. 06 3. 08

05. வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




1. ○ 2. ▭ 3. △

06. குடைகள் கறுப்பு நிறத்துணிகளால் ஆக்கப்பட்டிருப்பதன் காரணம்?

1. கறுப்பு நிறம் சூரிய ஒளியை உறிஞ்சும்
2. கறுப்பு நிறம் குளிர்மையானது
3. கறுப்பு துக்கத்தைக் குறிப்பதால்


07. துருப்பிடித்தல், தகனம், சுவாசம் மூன்றிற்கும் பயன்படும் வாயு?

1. ஐதரசன் 2. ஒட்சிசன் 3. காபனீரொட்சைட்

08. 60 $Kmh^{-1}$ கதியில் செல்லும் புகையிரம் ஒன்று அதே திசையில் 6 $Kmh^{-1}$ கதியில் நடந்து செல்லும் வழிப்போக்கர் ஒருவர் 10 செக்கனில் கடந்து செல்கின்றது இப்புகையிரதத்தின் நீளம் யாது?

1. 150 m 2. 120 m 3. 130 m

09. ஒவ்வொரு உருவிலும் முழு உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.




1. $\frac{1}{4}, \frac{1}{3}, \frac{1}{4}$ 2. $\frac{1}{8}, \frac{1}{8}, \frac{1}{4}$ 3. $\frac{1}{4}, \frac{1}{8}, \frac{1}{4}$

10. ஒரு பெரிய காணியில் பூந்தோட்டத்திற்கு மேற்கே தென்னந்தோப்பும் தென்னந்தோப்பிற்கு தெற்கே மாந்தோட்டமும் உள்ளன. ஆகவே பூந்தோட்டத்திற்கு எத்திசையில் மாந்தோட்டம் உள்ளது.
1. தெற்கு 2. தென்மேற்கு 3. கிழக்கு


11. ராஜா, நிமல் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 45 கிலோக்கிராம் ஆகும். நிமல், சுரேஸ், ராஜா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 68 கிலோகிராம் ஆகும் எனின் சுரேஸின் நிறை யாது?
1. 15 கிலோகிராம் 2. 68 கிலோகிராம் 3. 23 கிலோகிராம்

12. முகவையொன்றினுள் நீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை மூன்றையும் கலக்கி விடப்பட்டபோது மூன்றும் வெவ்வேறாகப் பிரிந்து தனித்தனி படையாகக் காணப்பட்டது. இதில் B படை யாதாக இருக்கலாம்?



1. நீர் 2. தேங்காயெண்ணெய் 3. மண்ணெண்ணெய்

13. 200 மீற்றர் சுற்று வட்டத்தைக் கொண்ட நீள்வட்ட மைதானம் இதுவாகும். இதில் ஒரு கிலோமீற்றர் தூரத்தை ஓடி முடிக்க வேண்டுமாயின் எத்தனை தடவைகள் இந்த மைதானத்தைச் சுற்றி ஓட வேண்டும்.



1. 5 2. 2 3. 3

**கீழே அட்டவணையில் 0 தொடக்கம் 9 வரையான ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டுள்ள 14 தொடக்கம் 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| E | A | P | M | S | F | H | B | D | E |

14. AP + RB + VK = ..........................................
1. ABK 2. APE 3. EPA


15. SVP - PDK = ..........................................
1. PAB 2. MVE 3. ABP

16. MRB X V = ..........................................
1. ADMV 2. VDAV 3. ADVM

17. ஒருவருக்கு தீ விபத்து ஏற்படும்போது அவ்விபத்துக்குள்ளானவர் உடனடியாகச் செய்ய வேண்டியது.
1. நீர் இருக்கும் இடத்தைத் தேடி ஓட வேண்டும்
2. நிலத்தில் படுத்து உருள வேண்டும்
3. வேகமாக ஓட வேண்டும்

18. குமாரின் வயது 15, கமல் குமாரிலும் பார்க்க 7 வயது மூத்தவன். ராஜா கமலிலும் பார்க்க 5 வயது இளையவன் எனின் ராஜாவின் வயது என்ன?
1. 22 2. 27 3. 39


19. அருகே தரப்பட்ட முகவையானது 7 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?




1. 7 L 800 ml 2. 6 L 200 ml 3. 5 L 200 ml




20. பெட்டியினுள் தரப்பட்ட உருவில் A வட்டத்திற்கும் B வட்டத்திற்கும் பொதுவான இலக்கங்கள் யாவை?





1. 5.3 2. 4.2 3. 1.6

21. காகம் ஒன்று தனது அலகில் வடையுடன் அமர்ந்திருந்தது. அவ்வழியே வந்த நரி அதனைக் கண்டது. காகத்திடம் வடையை அபகரிக்க எண்ணியது. காக்கையாரே காக்கையாரே நீர் இனிமையாகப் பாடுவீர். ஒரு பாட்டுப்பாடு என்றது. காகம் வடையைத் தனது கால்களுக்கு இடையே வைத்தபடி கா கா என்று கரைந்தது. நரி வெட்கத்துடன் சென்றது. இக்கதையில் இருந்து புலப்படும் கருத்து யாது?
1. காகம் நரியைக் கண்டால் கரையும்
2. பிறரை வஞ்சிக்க நினைப்பவர்கள் தாமே ஏமாறுவார்கள்
3. நரிக்கு வடை என்றால் மிகவும் விருப்பம்


22. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரிகள் ஒரே அளவானவை. இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரே நேரத்தில் மூடப்பட்டது. இதன்போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?
1. A தட்டில் உள்ள மெழுகு திரி
2. B தட்டில் உள்ள மெழுகு திரி
3. A, B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது




23.




மேலே தரப்பட்ட உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரவேண்டிய உருக் கோலத்தைத் தெரிவுசெய்க.





24. விதை பழத்திற்கு வெளியே அமைந்துள்ள தாவரம்?
1. தென்னை 2. மரமுந்திரிகை 3. அன்னாசி

25. பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து தாலியில் உண்டு வாலியில் இல்லை.
இரண்டாம் எழுத்து காம்பில் இல்லை கம்பில் உண்டு.
மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு குடமியில் இல்லை. (..........................................)

26. கீழ் வரும் வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைக்கும் பொழுது பந்தியொன்றினைப் பெறமுடியும். அச்சரியான விடையைத் தெரிவு செய்க.
A அங்கே ஓர் ஆமையைப் பிடித்து
B ஒரு நாள் ஒரு ஓநாய் பசியால் எங்கும் அலைந்தது.
C அவ்வாமையைத் தன் கூரிய பற்களால் கடித்தது.
D கடைசியாக ஒரு குளக்கரைக்கு வந்தது.
1. C, B, A, D 2. B, D, A, C 3. B, A, D, C

27. A பயணச் சீட்டுப் பெறுதல்
B பொதிகளை இருக்கையில் மேல் பொதிவைக்கும் இடத்தில் வைத்தல்
C புகையிரத நிலையம் செல்லல்.
D ஆசனத்தில் அமர்தல்
1. C, A, D, B 2. C, A, B, D 3. A, C, B, D

28. பின்வரும் அறிவுத்தல்களுக்கு ஏற்ப சரியான வரிப்படத்தை தெரிவு செய்க.
-வடக்கு நோக்கிச் செல்க
-பின்பு கிழக்கு நோக்கிச் செல்க
-பின்பு வடக்கு நோக்கிச் செல்க
-பின்பு மேற்கு நோக்கிச் செல்க



# அசாம் கலவரத்தின் எதிரொலி; முகாமிலிருந்த 500 பேர் மாயம்

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்கியிருந்த சுமார் 500 பேர் மாயமாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அசாம் மாநிலத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு, போடோ பழங்குடியினத்தவர்களுக்கும் வங்கதேச சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் மூண்டது.

இதனையடுத்து மாநிலத்தின் கோக்ரஜார், துப்ரி, சிராங் மாவட்டங்களில் அதிகளவு வெடித்த கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களை தங்க வைக்க நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன.

மாநிலம் முழுவதும் சுமார் 215 முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. 2 இலட்சம் பேர் முகாமில் தங்கியிருந்தனர்.


இந்நிலையில் முகாமில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை குறித்து கணக்கெடுக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கானோர் திடீரென காணாமல் போயுள்ளனர்.

தற்போது வரை எடுத்துள்ள கணக்கெடுப்பின் படி 500 பேர் வரை காணாமல் போயுள்ளமை உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் மாயமானவர்களைத் தேடும் பணி தீவிரப் படுத்தப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# தேசத்துரோக வழக்கில் கைதான கார்டூன் ஓவியர் விடுதலை



தேசிய சின்னங்களை அவமதித்து கார்டூன் வரைந்த அசீம் திரிவேதி சிறையிலிருந்து விடுதலை பெற்றார்.

இந்தியாவின் தேசிய சின்னமான நான்கு சிங்க முகம் அடங்கிய அசோக சின்னத்தை நரி முகத்துடன் கூடிய கார்டூனை வரைந்து சர்ச்சையில் சிக்கினார்.

இந்த விவகாரத்தில் மும்பை பொலிஸாரால் கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அரசியலமைப்பை அவமதித்து கார்டூன் வெளியிட்டதாக, இவர் மீது தேசதுரோக வழக்குப்பதிவு செய்தனர் பொலிஸார்.

மும்பை பந்த்ரா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஆர்தர்சாலை சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் பிணை கோரியதை தொடர்ந்து, அவர் நேற்று முன்தினம் விடுதலையானர். அவர் மீதான தேச துரோக வழக்கு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விடுதலையானதைத் தொடர்ந்து அவரை அவரின் ஆதரவாளர்கள் வரவேற்றனர்.

# பிரதமர் பதவிக்கு ராகுல் பொருத்தமானவரல்ல

ஊழல் பிரச்சினையால் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரிந்து வருவதாக சமாஜ்வாடி கட்சியின் தலைவர் முலாயம் சிங் கருத்து தெரிவித்த நிலையில், அக்கட்சியின் பொது செயலாளர், ராகுலை நேரடியாக தாக்கியுள்ளார்.

. சமாஜ்வாடி கட்சி பொதுசெயலாளர் மோகன் சிங் இதுகுறித்துக் கூறியதாவது, நாட்டில் பல்வேறு பிரச்சினைகள், சவால்கள் உள்ளன. அவற்றையெல்லாம் எதிர்கொள்ள ராகுலால் முடியாது. பிரதமர் வேட்பாளருக்கு அவர் பொருத்தமானவர் கிடையாது என்றார். மேலும் தங்களது கட்சியில் பிரதமர் வேட்பாளர் யார் என்று கேட்டதற்கு, 3ஆவது அணி அமைவதற்கு முன்பாக, தங்கள் கட்சி சார்பில் யாரையும் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப் போவதில்லை என்று கூறினார்.



கோவை, ஆர்.எஸ்., புரம், சத்குரு சேவா நிலைய மாணவர்கள், சிவகாசி பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு, மெழுகுவர்த்தி ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# மத்திய அமைச்சில் திடீர் மாற்றம் சிரஞ்சீவி அமைச்சராகும் வாய்ப்பு



(புதுடில்லி)

மத்திய மந்திரி சபையில் இருந்து பிரணாப் முகர்ஜி, சசிதரூர், ஆ.ராசா, தயாநிதி மாறன் ஆகியோர் விலகியதால் அவர்கள் வசித்து வந்த அமைச்சுக்கள் வெற்றிடமாக உள்ளன. மத்திய மந்திரி விலாஸ்ராவ் தேஷ்முக் சமீபத்தில் திடீரென மரணம் அடைந்ததால், அவரது அமைச்சுக்கு புதிய மந்திரி நியமிக்கப்பட வேண்டியதுள்ளது.

தற்போது சல்மான் குர்ஷித், கபில்சிபல், வயலார் ரவி, வீரப்பமொய்லி, ஆனந்த்சர்மா, பவன்குமார் பன்சால், குமாரி செல்ஜா உள்பட 8 மத்திய மந்திரிகள் தங்களது அமைச்சு தவிர வேறு சில அமைச்சுக்களை கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறார்கள். பிரதமர் மன்மோகன்சிங்கிடமும் சில அமைச்சுக்கள் கூடுதலாக உள்ளன.

எனவே அரசுப் பணிகளை விரைந்து முடிக்க புதிய மத்திய மந்திரிகள் நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியும், பிரதமர் மன்மோகன்சிங்கும் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

இந்த மாத இறுதிக்குள் மந்திரி சபை மாற்றம் செய்யப்படும் என்று தெரிகிறது.

2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு மந்திரி சபை மாற்றத்தை மேற்கொள்ள சோனியா தீவிரமாக உள்ளார். எனவே மந்திரி சபை மாற்றமும், அமைச்சுகளின் மாற்றங்களும் பெரிய அளவில் இருக்கும் என்று கூறப்படுகிறது.

மத்திய மந்திரிகள் சுபோத்காந்த் சகாய், ஜெய்ஸ்வால் ஆகிய இருவர் மீது சோனியாவுக்கு கடும் அதிருப்தி ஏற்பட்டு இருப்பதால், அவர்கள் கட்சிப்பணிக்கு அனுப்பப்படுவார்கள் என்று தெரிகிறது.

ராகுல்காந்தி பரிந்துரைப்படி புதிய மந்திரிகளில் பெரும்பாலானவர்கள் புதுமுகங்களாக இருப்பார்கள் என்று தெரிய வந்துள்ளது. நடிகர் சிரஞ்சீவி, மணீஷ் திவாரி, மீனாட்சி நடராஜன், ஜோதி மிர்தா, மாணிக்கம் தாகூர் ஆகியோர் மத்திய மந்திரி ஆவார்கள் என்று டில்லி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அஜ்மல் கசாப்புக்கு கராத்தே பயிற்சி



(மும்பை)

மும்பை தாக்குதல் வழக்கில் தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப் மும்பை ஆர்தர் ரோடு சிறையில் பலத்த பாதுகாப்புடன் அடைக்கப்பட்டுள்ளான்.

தீர்ப்பை உறுதி செய்து உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் நகலை கடந்த சனிக்கிழமை கசாப்பிடம் சிறையில் அதிகாரிகள் வழங்கினார்கள். அதை அவன் புன்சிரிப்புடன் பெற்றுக் கொண்டான். எந்தவித பயமோ ச்லனமோ அவன் முகத்தில் காணப்படவில்லை.

இதுபற்றி சிறை அதிகாரிகளிடம் கேட்டபோது, தீர்ப்பின் நகலை கசாப் புன்முறுவலுடன் வாங்கிக் கொண்டான். கருணை மனு அனுப்புவது பற்றி எதுவும் சொல்லாமல் மவுனமாக இருந்தான். அவனிடம் தீர்ப்பு நகலை கொடுத்து உச்சநீதிமன்றம் உத்தரவு பற்றி விளக்கம் கூறுவோம் என்றார்.

இந்த நிலையில் கசாப் தூக்கு தண்டனையை எதிர்நோக்கி இருப்பதால் சில சலுகைகள் வழங்கப்படுகிறது. மன உளைச்சலையும், உடல் சோர்வையும் போக்கும் வகையில் கராத்தே பயற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளான். தினமும் காலை 1 மணி நேரம் அவன் சிறைக்கு உள்ளேயே கராத்தே பயிற்சி பெறுகிறான். கராத்தேயில் பட்டம் பெற விரும்புகிறான் என்று சிறை அதிகாரி ஒருவர் கூறினார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# "வனயுத்தம்" திரைப்படத்தை வெளியிட வீரப்பன் மனைவி எதிர்ப்பு



தென் மாநிலங்களில் சந்தன மரங்கள் மற்றும் யானைத் தந்தங்களை வெட்டி எடுத்து முறைகேடாக கடத்தல் செய்து விற்று வந்தவர் வீரப்பன்.

எனவே இவர் சந்தனக்கடத்தல் வீரப்பன் என்றே அறியப்படுகிறார்.

நீண்ட நாட்களாக தமிழக பொலிஸ் கண்களில் சிக்காத இவர், கடந்த 2004ஆம் ஆண்டு சிக்கி துப்பாக்கிக்கு பலியானார்.


இந்நிலையில் இவரது வாழ்க்கையை பற்றிய படம் வனயுத்தம் என்ற பெயரில் தமிழில் வெளிவருகின்றது.

இப்படத்திற்கு வீரப்பனின் . மனைவி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இப்படத்தில் தன்னுடைய கதாப்பாத்திரம் அவலமாக சித்திரிக்கப்பட்டுள்ளதாக அவர் கருதுகின்றார்.

இது தொடர்பாக முத்து லட்சுமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இப்படம் வெளிவந்தால் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கை சீர்குலைந்து விடுமெனவும் தெரிவித்துள்ளார்.

இப்படத்தில் அர்ஜுன் பொலிஸாகவும் கிஷோர் வீரப்பனாகவும் நடிக்கின்றனர்.



அவுஸ்ரேலியா சென்றுள்ள சிலி ஜனாதிபதி செபஸ்டியன் பினராவுக்கு கேன்பராவில் அரச மரியாதை அளிக்கப்பட்டது. அரச மரியாதையை ஏற்றுக்கொள்ளுமாறு பினராவை (இட மிருந்து மூன்றாவது) அழைக்கும் அவுஸ்ரேலியாவின் கவர்னர் ஜெனரல் குவன்டின் பிரைஸ்.

# பாக். தொழிற்சாலைகளில் தீவிபத்து; 314 இற்கும் மேற்பட்டோர் பலி

(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் உள்ள இருவேறு தொழிற் சாலைகளில் நிகழ்ந்த தீ விபத்துகளில் 314இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டில் சிந்து மாகாணம் கராச்சியில் பால்டியா பகுதியில் உள்ள பின்னலாடைத் தொழிற்சாலையில் கடந்த செவ்வாய் இரவு தீ விபத்து ஏற்பட்டது. 4 மாடித் தொழிற்சாலையான இங்கு ஷிப்ட் முறைகளில் மொத்தம் 2,000 பேர் வரை பணிபுரிகின்றனர்.




இத்தொழிற்சாலையின் இரண்டாவது தளத்தில் தீ மளமளவெனப் பரவியதும் தொழிலாளர்கள் சிலர் மாடியில் இருந்து ஜன்னல் வழியாகக் குதித்து உயிர் தப்பினர். அவ்வாறு குதித்தவர்களில் 65 பேருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

சிக்கிக் கொண்ட தொழிலாளர்கள் கைத்தொலைபேசிகளை ஒளிரச் செய்து தங்களின் இருப்பிடத்தை மீட்புப் படையினருக்குத் தெரியப்படுத்தினர். அதை அடையாளமாகக் கொண்டு தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர்.

40இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களும், கப்பல் படையினரும் இணைந்து தீயை அணைக்கப்போராடி வருகின்றனர். தீ கட்டுக்கடங்காமல் எரிந்ததால் தீயணைப்புப் படையினரால் கட்டடத்தின் அருகே செல்ல முடியவில்லை. இதுவரை 289 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கட்டடம் இடிந்து விழும் அளவுக்கு விரிசல் ஏற்பட்டுள்ளதால் மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் பாகிஸ்தானில் ஏற்பட்ட தீ விபத்துகளில் மிக மோசமான விபத்து இதுவெனக் கருதப்படுகிறது.

# போலிகள் தயாரிப்பில் உச்சக்கட்டம்; மனித கழிவில் சிகரெட் தயாரிப்பு



(லண்டன்)

இங்கிலாந்து மக்கள் விரும்பி புகைக்கும் சிகரெட்களில் மனித மலம், இறந்த பூச்சிகள், புழுதி மண் போன்றவை கலக்கப்பட்டிருக்கும் அதிர்ச்சித் தகவல் சோதனை மூலம் தெரியவந்துள்ளது. இதுபோல தரக் குறைவான, ஆரோக்கியத்துக்கு கேடுவிளைவிக்கும் போலி சிகரெட்கள் சீனாவில் தயாராகி முறைகேடான வகையில் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டதும் அம்பலமாகியுள்ளது.

இங்கிலாந்தில் போலி சிகரெட் புழக்கம் பற்றி அறிய பர்மிங்காம் நகரில் சுவிஸசர்லாந்தை சேர்ந்த எம்.எஸ். இன்டலிஜென்ஸ் நிறுவனம் சமீபத்தில் ஆய்வு நடத்தியது. இதில் 30.9 சதவீத சிகரெட்கள் போலி மற்றும் வெளி நாடுகளில் இருந்து முறைகேடாக எடுத்து வரப்படுகின்றன எனத் தெரியவந்தது. கடந்த ஆண்டில் இது 14.1 சதவீதம் மட்டுமே இருந்தது. ஒரே ஆண்டில் இரட்டிப்பாக உயர்ந்தமை அதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து, தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதில் உடலுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய ஆஸ்பெஸ்டாஸ் இரசாயன பொருள், புழுதி மண், மனித மலம், இறந்த பூச்சிகள் போன்ற கழிவுகள் அந்த சிகரெட்களில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதோடு, பொது இடத்தில் அள்ளிய குப்பையை புகையிலையுடன் கலந்து சிகரெட்களை உருவாக்கியிருக்கலாம் என்று சந்தேகமும் எழுந்துளளது. சீனா உள்ளிட்ட கிழக்கு நாடுகளில் இருந்து போலி சிகரெட்கள் அதிகளவில் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டதும் அம்பலமாகியுள்ளது.

கண்ட பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் போலி சிகரெட்கள் உடல்நலத்தை கெடுக்கும். உயிருக்கு ஆபத்தாக முடியும். எனவே எச்சரிக்கையாக இருங்கள் என்று சுகாதார துறை அந்நாட்டு மக்களை எச்சரித்துள்ளது. தரக்குறைவான வெளிநாட்டு சிகரெட், போலி சிகரெட்கள் நாட்டுக்குள் கடத்தப்படுகிறதா என்று கண்காணிக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

உலகச் செய்திகள்

# ரஷ்யாவில் விமான விபத்து; குழந்தை உட்பட 10பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தொழில் நகரமான பெட்ரோபாவ்லாஸ்க் - காம்சாட்ஸ்கிலிருந்து பலானாவுக்கு ஆன்-28 என்ற சிறிய ரக பயணிகள் விமானம் சென்றது. இதில் 12 பயணிகள், 2 விமானிகள் இருந்தனர்.

பலானா விமான நிலையத்தை நெருங்கியபோது இந்த விமானத்தின் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனால் பதற்றம் அடைந்த விமான நிலைய அதிகாரிகள், மீட்பு ஹெலி கொப்டரை அனுப்பி தேடினர். அப்போது பலானாவில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் அந்த விமானம் விழுந்து நொறுங்கியது கண்டுபிடிக்கப்பட்டது.



உடனே மீட்புக் குழுவினர் அந்த இடத்திற்குச் சென்றனர். நொறுங்கிய விமானத்தின் உள்ளே ஒரு குழந்தை உள்பட 10 பேர் பிணமாக மீட்கப்பட்டனர். மேலும் பலத்த காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 4 பேர் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

விபத்துக்கான காரணம் பற்றி அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. மோசமான வானிலை காரணமாக விமானத்தின் ரேடியோ தொடர்பு துண்டிக்கப்பட்டதால் அவசரமாக தரையிறக்க விமானி முயன்றபோது விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.


# லிபியாவில் ரொக்கட் தாக்குதல் அமெரிக்கத் தூதுவர் பலி

(பெங்காசி)

பெங்காசியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் லிபியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட 4 தூதரக அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான தாக்குதல் தினமான நேற்று புளோரிடாவில் போதகர் ஜோன்ஸ் ஒரு குறும்படத்தை வெளியிட்டார். அதில், நபிகள் நாயகத்தை கேலி செய்யும் வகையில் காட்சிகள் இருந்ததாக கூறப்படுகிறது. இந்தத் திரைப்படம் இஸ்லாம் மதத் தலைவர் முகமது நபியை அவமானப்படுத்தும் வகையில் இருப்பதாக முஸ்லிம்கள் குற்றம் சாட்டினர். மேலும் இதனைக் கண்டித்து லிபியா மற்றும் எகிப்தில் இஸ்லாமியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் லிபியாவின் பெங்காசி நகரில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்தில் நேற்று இரவு துப்பாக்கி ஏந்திய ஒரு கும்பல் திடீரெனப்புகுந்து தாக்குதல் நடத்தியது. துப்பாக்கி சூடு நடத்தியதுடன், ரொக்கெட் குண்டுகளையும் வீசித் தாக்குதல் நடத்தினர். இதனால் தூரதகம் பற்றி எரிந்தது. இந்தத் திடீர் தாக்குதலில் அமெரிக்கத் தூதர் ஸ்டீவன் மற்றும் 3 தூதரக ஊழியர்கள் பலியானார்கள். தூதரக அலுவலகம் முற்றிலும் எரிந்து நாசமானதோடு, முக்கிய ஆவணங்களும் தீயில் கருகியுள்ளன.



இந்தத் தாக்குதல்களுக்கு அமெரிக்க வெளியுறவு மந்திரி ஹிலாரி கிளிண்டன் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

# கற்பழிக்க முயன்றவரை கொன்றவருக்கு சிறை

கற்பழிக்க முயற்சித்தவரை கத்தியால் குத்திக் கொலை செய்த பெண்ணுக்கு சீனாவில் நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் குவாங்டாங்மாகாணத்தைச் சேர்ந்தவர்15 வயதுடைய சுவான் சியோகி, என்பவர் கடந்த மே மாதம் ரயிலைத் தவற விட்ட நிலையில் குவாங்சூ ரயில் நிலையத்தில், தவித்து நின்ற போது அவரைத் தனது வீட்டில் தங்கிக் கொள்ளும்படி அழைத்துள்ளார் சுமை தூக்கும் தொழிலாளியான 50 வயதுடைய யாங்க் ஜினயுவான், யாங்கின் பேச்சை நம்பி அவரது வீட்டுக்குச் சென்றார் சியோகி. ஆனால், சியோகியை, யாங்க் வல்லுறவுக்கு முயற்சித்துள்ளார். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அங்கிருந்த கத்தியை எடுத்து யாங்க்கை சரமாரியாகக் குத்தினார் சியோகி. இதில், யாங்க் இறந்தார். இந்த வழக்கை விசாரித்த குவாங்டாங் நீதிமன்றம், சியோகிக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

# ஆப்கான் தலிபான்கள் 2200 கோடி ரூபா திரட்டு



(நியூயார்க்)

கடந்த 2011 - 2012 ஆம் நிதி ஆண்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ரூபா 2,200 கோடி நிதியை திரட்டி இருப்பதாக ஐ.நா. நிபுணர் குழு ஒன்று ஐ.நா. பாதுகாப்பு சபையிடம் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. நன்கொடை மூலமும் மற்றும் அபின் உற்பத்தி, குடிநீர், மின்விநியோகம் மீதான வரி விதிப்பு மூலமும், போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் பணம் பறிப்பு மூலமும் இந்த நிதியை தலிபான்கள் திரட்டி இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிதியில், ரூபா 1,500 கோடி தலிபான் தலைமையகத்துக்குச் சென்றதாகவும், மீதிப்பணத்தை கீழ்மட்டத்தில் உள்ள தலிபான்கள் செலவழித்து இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தள்ளுவண்டியில் உணவுப் பொருட்கள்; விற்பனை செய்வதற்குத் தடை விதிப்பு

(திருநெல்வேலி)

கோப்பாய் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தின்பண்டங்கள் விற்பனை செய்யும் நடமாடும் கண்ணாடி வண்டிகளுக்கான அனுமதிப் பத்திரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உரும்பிராய் சந்திக்கருகாமையில் கண்ணாடி வண்டியொன்றில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த பழுதடைந்த இறைச்சி, பொரித்த மீன், இறால் வடை, சிறிய வடை, முதல் நாள் தயாரிக்கப்பட்ட தின்பண்டங்கள் என சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட உணவுகள் கோப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்பழுதடைந்த சுகாதாரச் சீரழிவுடன் காணப்பட்ட தின்பண்டங்கள் கைப்பற்றப்பட்டு சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகை தந்த கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜெயசீலன் மற்றும் வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் முன்னிலையில் அந்த இடத்தில் வைத்தே அழிக்கப்பட்டன.

கண்ணாடி வண்டில் உரிமையாளர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதனையடுத்து இத்தின்பண்டங்கள் விற்பனை செய்யும் வண்டிகளுக்கான அனுமதிப் பத்திரம் கோப்பாய் பிரதேசத்தில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தவிசாளர் தெரிவித்தார்.

இக்கண்ணாடி வண்டிகள் பிரதேச சபையினரிடமிருந்து அனுமதிப் பத்திரம் பெற்ற பின்னரே இவ்வியாபாரத்தில் ஈடுபடமுடியும் என்பதே நடைமுறையாக இருந்தபோதிலும் இதுவரை பல வண்டிகளுக்கான அனுமதிப் பத்திரம் உள்ளூராட்சி சபைகளில் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர உரும்பிராய் - மானிபாய் வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றிலிருந்து காலாவதியான பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. பிஸ்கட், சோடா, தேயிலை, பால்மா போன்ற காலாவதியான பொருட்கள் சுகாதாரப் பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு அவ்விடத்திலேயே வைத்து அழிக்கப்பட்டதுடன், வியாபார நிலைய உரிமையாளரும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான பா.சயந்தன், ப.சதீஸ்குமார், வை.பிறேம்குமார் ஆகியோரே உரும்பிராய் பகுதியில் இத்திடீர் சோதனையை நடத்தியிருந்தனர். 14 கடைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. (137)

## வடக்கில் துரித...

நடனம் மற்றும் இசை முழங்க வரவேற்று நூல் நிலையத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு விசேடமாக வைக்கப்பட்டிருந்த யாழ். நூல் நிலையத்தின் வரலாற்றைச் சித்தரிக்கும் வர்ணப் புகைப்படங்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதிநிதிகளுக்கு காண்பித்து விளக்கினார்.

தொடர்ந்து யாழ். நூல் நிலையத்தின் வரலாற்றைச் சித்தரிக்கும் ஒளிப்படத்துடன் கூடிய விவரணமும் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் யாழ். நூல் நிலையத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட அரச உயரதிகாரிகளுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று தேங்காய் உடைத்து வழிபாடு செய்த பிரதிநிதிகள் அங்கிருந்த பொதுமக்களுடன் பேசியதோடு புகைப்படமும் எடுத்துக்கொண்டனர்.

போர் நடைபெற்ற இம்மாவட்டங்களில் இவ்வாறு ஆலயங்கள் திறம்பட அமைந்திருப்பது மகிழ்ச்சியாக இருப்பதாக ஒரு பிரதிநிதி தெரிவித்தார்.

அங்கிருந்து ஏ-9 வீதியூடாக மறவன்புலோவில் அமைந்துள்ள வீட்டுத்திட்ட வீடுகளைச் சென்று பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

அங்கிருந்து சாவகச்சேரி வழியாக அவர்களின் பயணம் கிளிநொச்சி வரை சென்றது. கிளிநொச்சி கூட்டுப்படைத் தலைமையகத்தில் இராணுவத்தினரின் வரவேற்புடன் மதிய போசனமும் இடம்பெற்றது.

இதன்போது மேஜர் ஜெனரல் உதய பெரேரா உரை நிகழ்த்தினார். பயங்கரவாதிகளை ஒழித்த பின்னர் கண்ணிவெடிகளை அகற்றி மீள்குடியேற்றல் மற்றும் இராணுவம் மக்களுடன் நல்லுறவுடன் செயற்படுவது பற்றியும் அவர்களுக்கு விளக்கமளித்ததோடு பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றக் குழுவின் உபதலைவருக்கு மேஜர் ஜெனரல் நினைவுச்சின்னம் வழங்கினார். பிரதிநிதிகள் அனைவருக்கும் இராணுவச் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கங்கள் வழங்கினார்.

தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட பிரதிநிதிகள் குழு பரந்தன் விவசாயப் பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டது.

அங்கு அவர்களுக்கு இளநீர் வழங்கப்பட்டது. பிரதிநிதிகள் இளநீரை சுவைத்துப் பருகினர். அத்துடன் விதைநெற் களஞ்சியத்தை பார்வையிட்டதுடன், விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை பார்வையிட்டனர்.

அங்கிருந்து 4.30 மணியளவில் புறப்பட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழு வாகனங்களில் அமர்ந்தபடியே இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மின் பரிவர்த்தனை நிலையத்தை பார்வையிட்டதுடன் கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் சென்றனர்.

வைத்தியசாலையின் தற்போதைய நிலை பற்றியும் தமது தேவைப்பாடுகள் பற்றியும் முன்னரிலும் பார்க்க தற்போது அதிகரித்துள்ள வசதிகள் பற்றியும் பிரதிநிதிகளிடம் வைத்தியசாலைப் பணிப்பாளர் தனது கருத்துகளையும் நன்றிகளையும் தெரிவித்ததோடு குழுவினர் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு வவுனியா சென்றனர்.

விஜயம் செய்த பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அனைவருக்கும் பனை உற்பத்திப் பொருட்கள், தின்பண்டங்கள் இடப்பட்ட பனையோலையால் பின்னப்பட்ட கூடைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரால் வழங்கப்பட்டன. (பா,இ)

## அதிபர் நியமனம்

(பருத்தித்துறை)

கரவெட்டி ஸ்ரீ சாரதா வித்தியாலயத்தின் புதிய அதிபராக பு.ரவீந்திரநாதன் வடமாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் அதிபர் தரம் 2-II பரீட்சைக்கு தோற்றியுள்ளார். இப்பாடசாலையில் முன்னர் அதிபராகக் கடமையாற்றியவர் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து அதிபர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

இதனால் இப்பாடசாலையின் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு பெற்றோர் விடுத்த கோரிக்கையை அடுத்து இப்பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். (109)

## இனப்...

தீர்வுகாண்பது தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளாததன் காரணமாகவே அதன் பணிகள் தாமதமாகி வருவதாக அமைச்சர் சில்வா, அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை இன்று நியமித்தால், தெரிவுக்குழுவின் பணிகளை நாளை முதல் ஆரம்பிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தவிர வடமாகாணத்தில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகள், மீள்குடியேற்றம் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிஷெல் சீசனும் கலந்துகொண்டார்.

## இலங்கை...

கொள்ள முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மனித உரிமை பேரவையின் பிரதி நிதிகளின் விஜயத்திற்கும் ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கும் இடையில் எந்த ச்ம்பந்தமும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய...

கூறினார். எது எப்படி இருந்தாலும் இறுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே ஆட்சியை பிடிக்கும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்ப சேவைக்கு ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்ட செயலாளர், அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலர் அலுவலகங்களுக்கான இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கு க.பொ.த (சா/த) மற்றும் உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையிலும் 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், தொழில்சார் தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் தரமான III ஆம் தரத்துக்கு தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கைக்குப் போதியதாக இல்லாவிடின் கீழ்குறிப்பிட்ட படி தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் எஞ்சிய வெற்றிடங்களுக்கான பயிற்சித் தரத்துக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இதன்படி பயிற்சித் தரத்திற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. பதவி நிலைக்கான தகுதிகளை பயிற்சித் தரத்திற்கும் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித் தகைமை தொடர்பான மேலதிக தகவல்களை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# இலங்கை புகலிடதாரிகள் நெளரு தீவுகளுக்கு மாற்றம்

(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நெளரு தீவுகளுக்கு அவுஸ்ரேலியா இடமாற்றம் செய்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை தாங்கி விமானம் நெளருவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

40 இலங்கையர்களே இவ்வாறு நெளருவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எந்தவிதமான எதிர்ப்பும் இன்றி புகலிடக் கோரிக்கையாளர்கள் விமானத்தில் ஏறியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, சிரியாவிலிருந்து புகலிடம் கோருவோருக்கு கூடுதல் சந்தர்ப்பம் வழங்க அவுஸ்ரேலியா தீர்மானித்துள்ளது.

மேலும் ஆயிரம் சிரிய புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு புகலிடம் வழங்குவதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் ஆட்சியமைக்க மூன்று கட்சிகள் கடிதம்

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பாக 3 கட்சிகள் ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரமவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இது குறித்து தமக்கு அறிவித்துள்ளதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எனினும் மாகாண சபைத் தேர்தல் மூலம் தெரிவான பிரதிநிதிகளின் பெயர்கள் இதுவரை வர்த்தமானியில் பிரசுரமாகவில்லை என்று ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம கூறினார்.

போனஸ் ஆசனங்களுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் இன்னும் பிரசுரிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆட்சியமைப்பதில்...

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவு குறித்து பிளேக், அக்கறையுடன் கேட்டறிந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள றொபேட் ஓ பிளேக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் காலை சந்திப்பு ஒன்றை மேற்கொண்டது.

இந்தச் சந்திப்பில், முதலாவதாக பிளேக் எடுத்துக் கொண்ட விடயமே, கிழக்கு மாகாண சபைத் தேர்தல்தான். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

அத்துடன் தற்போது கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமைகள் குறித்தும் அவர் கேட்டார். அதற்கு நாம் உரிய விளக்கங்களை வழங்கியுள்ளோம்.

தொடர்ந்து அரசியல் தீர்வு விடயம், வடக்கு கிழக்கில் மீள்குடியேற்றம், தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் குறித்தும், காணாமல் போனோர் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இராணுவ ஆக்கிரமிப்பு, காணி சுவீகரிப்பு, மற்றும் இவற்றில் அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்தும் அதிலுள்ள குறைபாடுகள் குறித்தும் பிளேக்கிற்கு நாம் விளக்கமளித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# ஜனநாயகத்தைக் காட்டமுயன்று கேலிக்குள்ளான அரசாங்கம்

## என்கிறது ஐ.தே.க

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் தூதுக்குழுவினருக்கு, இந்த நாட்டில் இல்லாத சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் காட்ட முயன்ற அரசாங்கம் கேலிக்கிடமாகிப் போயுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களான பொதுச்சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு என்பவற்றை வலுவுற்றதாக்கிய 18 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின் நாட்டில் ஜனநாயகம் உண்டென இந்தத் தூதுக்குழுவினருக்கு கூறியதால் இந்த அரசாங்கம் கேலிக்கிடமாகிப் போயுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றுவான் விஜயவர்தன ஊடகவியலாளருக்குத் தெரிவித்தார்.

சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறாது அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தல்கள் இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லை என்பதற்கு சான்றாகும் என அவர் கூறினார்.

ஆளும் கட்சி, தேர்தலுக்கு முந்திய நாட்களில் அரச சொத்துக்களை துஷ்ப்பிரயோகம் செய்து தேர்தல் சட்டங்களை வெளிப்படையாக மீறியது.

தேர்தல் தினம் அமைதியாகவே காணப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே கெடுதி நடந்துவிட்டது. கிழக்கு மாகாணத்தில் தேர்தல் தினத்தன்று விளையாட்டு அமைச்சு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியது.

தேர்தல்கள் ஆணையாளர் சுதந்திரமான நீதியான தேர்தலை நடத்தப்பெரும் முயற்சி மேற்கொண்டபோதும் அமைச்சர்கள் தாம் நினைத்ததெல்லாவற்றையும் செய்து முடித்தனர் என அவர் மேலும் கூறினார்.

# ஜனாதிபதியை சந்திக்கிறார் பிள்ளையான்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், முனாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), இந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளாரென அவரது பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டொரு தினங்களில் இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சந்திப்பின் போது கிழக்கு மாகாண சபை அமைப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பில் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து, கிழக்கில் ஆட்சி அமைக்க ஒத்துழைப்பு வழங்கும் என்று நம்புவதாகவும் அசாத் மௌலான தெரிவித்துள்ளார்.

# பிளேக் – பீரிஸ் நேற்று சந்திப்பு



இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கிற்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்த றொபேட் ஓ பிளேக் நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்த நிலையில் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துள்ளார்

வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது கூட்டமைப்பினருடன் பேசப்பட்ட விடயங்கள், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 86 பேருடன் அவுஸ்ரேலியா சென்ற இரண்டு படகுகள் சிக்கின



படகுமூலம் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முயன்ற 86 பேரை சிலாபம் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். இதன்மூலம், இவ்வருடம் கைது செய்யப்பட்ட சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை 1900 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுக் காலை செனேஷா துவ எனும் படகில் பயணம் செய்த 58 தமிழர்கள், 9 சிங்களவர்கள் உட்பட 67 பேர் கைது செய்யப்பட்டதுடன். செலோனி துவ எனும் படகிலிருந்து 14 தமிழர்கள் 5 சிங்களவர்கள் உட்பட 19 பேர் கைது செய்யப்பட்டனர். சிலாபம் கரையோரத்திலிருந்து 20 கடல்மைல் தொலைவில் இவரகளின் படகுகள் வழி மறிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, சிலாபம், மன்னார், நீர்கொழும்பு, ஆனமடுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்து வரபபட்டுள்ளதுடன் இவர்கள் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை
5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு
9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம்
12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலான கோட்பாடு

## ஐ.நா.வை சாடுகிறது அரசு

(கொழும்பு)

ஐ.நா.வின் பாதுகாப்பதற்கான பொறுப்பு எனும் கோட்பாடானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் எனவே பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கோட்பாடு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா.விற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன்ன தெரிவித்துள்ளதாவது,

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற முறைமையை அரசியல் நோக்கங்களுக்காக ஐ.நா. பயன்படுத்தக்கூடாது.

புவியியல் காரணிகளின் அடிப்படையில் பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற ஆயுதத்தை பயன்படுத்திக் கொள்வதோ அல்லது தெரிவு அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதோ ஏற்றுக்கொள்ளமுடியாது .பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கோட்பாடு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

நாடுகளின் இறைமை பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோட்பாடு மிகவும் முக்கியமானது.

நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தேவையின்றி தலையீடு செய்யக்கூடாது என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் இரண்டாம் பகுதி ஏழாம் சரத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்னும் ஐக்கிய நாடுகள் அமைப்பின்கோட்பாடானது அநேக சந்தர்ப்பங்களில் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும் முனைப்புக்களுக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்னும் கோட்பாடு இரட்டை நிலைப்பாட்டை உடையதாகக் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


## தொழிற்பயிற்சிகள்

**Mobile Phone Repairing**
**Batch - I** திங்கள் முதல் வெள்ளிவரை 8.30 am - 11.00 am (காலம் 2 மாதம்)
**Batch - II** சனி, ஞாயிறு 9.00 a.m - 11.00am

**Electronics**
**TV, Mobile phone, DVD** வேறு எலக்ரோனிக் பொருட்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் - 10 மாதம்)

**Air conditioning**
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். பயிற்சிகள் ஆரம்பம் - 15.09.2012 (காலம் - 6 மாதம்)

விபரங்களிற்கு

**Jaffna Technical Institute**

இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0718561654

கிளை - ஸ்ரான்லி வீதி, 56/15, யாழ்ப்பாணம். தொ.பே. 0778249949

**சிங்கள வகுப்புக்கள்**

சிங்களமொழி எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும்,

**Batch - I** திங்கள் - வெள்ளிவரை (8.30 am - 10.30 am) (காலம் - 3 மாதம்)
**Batch - II** சனி, ஞாயிறு 4.00 pm - 6.00 pm (காலம் 9 மாதம்)
ஆசிரியர் - ஜே.ஆர். சூரி, ஆரம்பம் - 14.09.2012 (C/1864)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.